[illegible]

[illegible] ॥

June 1933

JL

8n2u,N27 8N

N33·6·11.

186928.

1062

1062

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF C...
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬. § ஸ்ரீமுக-ஆனி : 1933-ஜூன் § திங்கள் ௧௧.

உள்ளுறை — பக்கம்.


| | | |
|---|---|---|
| ௧. | நாட்டுக்கோட்டையார்களும் சங்கங்களும் | 393 |
| ௨. | ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். டி. முத்துசாமி ஐயர் | 396 |
| ௩. | வீடு அடைய வழி | 398 |
| ௪. | சாட்டையடி தலையிற்பெற்றுவந்த எம். எல். சாமியார் | ,, |
| ௫. | மதிப்புரை மஞ்சரி | 399 |
| ௬. | சிலப்பதிகாரம் | 401 |
| ௭. | வினா | 407 |
| ௮. | திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்மமகாநாடு | 408 |
| ௯. | சிவபெருமானே தியானிக்கற்பாலர் | 415 |
| ௰. | திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா. | (1-8) |


ஆசிரியர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:**—திருவாசக பாடசாலையில், திருஞானசம்பந்தர் குருபூசை வைகாசி ௨௭௳ மூலத்திருநாளில் நடைபெற்றது.

இம்மதி ௧௬௳ மக நட்சத்திரத்தில் மாணிக்கவாசகர் குருபூசையும், ௧௭௳ நடராஜர் திருமஞ்சனமும் தெரிசனமும் நடைபெறும்.

மகேஸ்வரபூசை:—திருவாளர் மெ. வெ. வேங்கடாசலம் செட்டியார் அவர்கள்வீட்டில், முருகக்கடவுள் திருவுருவை யலங்கரித்துத் திருவாராதனைபுரிந்து, ஆயிரக்கணக்கான மக்கட்கு அன்னம் அளிக்கப்பெற்றது.

**குன்றக்குடி:**— முருகவேள் திருவவதார வைபவம் சிவஸ்ரீ சதாசிவப் பிர்மம் அவர்களால் வழக்கம்போல் கொண்டாடி, பிரசங்கங்களும், பிராமணசந்தர்ப்பனையும், மகேசுவரபூசையும், திருவுலாவும் செய்யப்பெற்றன.

வைசாகத்திருநாள்: வைகாசி ௨௭௳ யில் ஆறுமாமுகத்தண்ணல் இருதேவிமாருடன் மண்டபப்படிகொண்டு வெள்ளிரதப்பவனிவந்தருளினர்.

**பிள்ளையார்பட்டி:**—ஒன்பது நகரக் கோயில்களுள் ஒன்றாகிய இத் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி நிறைவேறி, வைகாசி ௩௰௳ மகா கும்பாபிஷேகமும் ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

**காளையார்கோவில்:**—ஸ்ரீசௌந்தர நாயகி சமேத சோமேஸ்வர சுவாமிக்கு, வைகாசி ௧௫௳ தொடங்கி ௨௬௳ வரை மகோற்சவமும், தேவகோட்டைஜமீந்தார் அவர்களின் கட்டளை மண்டபப்படிகளும் வெகு விமரிசையாக நடைபெற்றன.

**ஆளுடையார்கோவில்:**—ஆனித்தெரிசன மகோற்சவம் இம்மதி ௭௳ தொடங்கி ௯௳ உதயத்பூர்வம் மாணிக்க வாசகருக்கு உபதேசக்காக்ஷியுடன் நிறைவேறும்.

**திருத்தென்குடித்திட்டை:**—கருந்திட்டைக் குடியிலிருந்து ஸ்ரீபெரியநாயகி சமேத வசிஷ்டேசுவரர், வைசாக பிர்மோற்சவத்துடன் சப்தஸ்தான திருவுலாப் போந்து, வைகாசி ௨௯௳ திருத்தென்குடித்திட்டைக்கு வந்தருளினர். சோமசேகர சுவாமியு மெழுந்தருளி திருவீதித் திருப்பவனி வந்த காக்ஷி சிறப்பாக இருந்தது. இம் மண்டபப்படியை திரு. இராஜகோபாலமூவரையர் நன்றாக நடத்தினர். தஞ்சை திரு. ஆதிமூலம் பிள்ளையவர்களின் முயற்சியால் ததியோதன விநியோகம் இனிது செய்யப்பெற்றது.

இத் திருத்தல மான்மியம் தேடிக் காணப்பெற்றுளது. வடமொழியில் இரண்டாயிரம் சுலோகங்களுடன் நாற்பது அத்தியாயங்களாக இருக்கின்றது. தமிழில் மொழி பெயர்த்து வெளிவரலாகும்.

**மேலச்சிவபுரி:**—சன்மார்க்கசபையின் 24—ம் ஆண்டு நிறைவுவிழா வைகாசி ௧௫௳ வெள்ளகால் ராவ்சாகேப் திருவாளர் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் தலைமையிலும், அடுத்தநாள் பழைய மாணவர்தினக் கொண்டாட்டம் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை யவர்கள் தலைமையிலும் அறிஞர் பலர் விரிவுரைகளுடன் சிறப்பாக நிறைவேறின.

OFFICE OF THE REGISTRAR
16 FEB 1934
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬ } பலவான்குடி—ஸ்ரீமுக—ஆனி { திங்கள் ௧௧.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## நாட்டுக் கோட்டையார்களும் சங்கங்களும்.

நாட்டுக் கோட்டையார் எனப் போற்றப்பெறும் தனவணிக மக்கள் பல்லாண்டுகளாகப் பாண்டிமண்டலத்தில் எல்லை வகுத்துக் குடியேறி,கோயில் குளங்களைத் தங்கட்குரியதாக ஸ்தாபித்து,பரம்பரைச் சிவபுண்ணியசீலர்களாய், சாதி சமய ஆசாரங்களில் நம்பிக்கையுடன் குடித்தன வாழ்க்கையை நடத்தியும், "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்ற ஔவைப்பிராட்டியாரின் திருவாக்கைப் பெருவாக்காகக் கொண்டு கடல் கடந்து சென்று பொருளீட்டியும், பொருளீட்டச் சென்றுள்ள இடங்களிலும் பற்பல திருக்கோயில்களைப் பொற்புறச் சமைத்தும் வழிபாடு செய்து, தெய்வ நம்பிக்கையிற் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். தங்களினத்தவர்களாலே மகிமை முதலான வரிகள் விதித்து, தாங்கள் வாழும் ஒவ்வோர் ஊர்களிலும் அவ்வவ்வூர்த் தனவணிக நகரத்தார்களுக்கு மாத்திரம் பாத்தியமாகச் சிவாலயங்களும், பங்காளிகளுக்குப் பொதுவாகத் தனித்தனி ஒன்பது நகரசிவாலயங்களும், மேலும் ஒவ்வொருவர் ஒவ்வொருகுடும்பத்தினர் சிலர் பலர் சேர்ந்து பலகோயில்களும் அமைத்துக் கொண்டு, அவைகளுக்கு நித்திய நைமித்திகங்கள் நடைபெற மூலதனங்கள் வைத்தும், அவைகட்கு உரியவர்களே அவைகளைச் சுதந்திரமாக நடத்திவருகின்றனர். இங்ஙனமே நகரங்களை எல்லை வகுத்

186928

துக் கொண்ட நாட்டின் மாத்திர மன்றி, இமயசேது பரியந்தமும், கடல்கடந்து பொருளீட்டச் சென்ற பர்மா மலாயா செய்கோன் இலங்கை முதலான இடங்களிலும் திருக்கோயில்களாதிய அறநிலையங்கள் பலவும், தம் மினத்தவர்களின் பொருள்கொண்டு நிறுவித் தம்மினத்தவர்க்கே சுதந்திர முடையதாய், தாங்களே வகித்து நடத்திவருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இங்ஙனம், ஓரினத்தவர்கள் தங்கள் சொந்தப்பொருள் கொண்டு அமைத்து, தாங்களே சுயமாக நடத்திவருவதில் பிறர் பங்கு பெறுதற்கு எவ்வாற்றானும் உரிமையுடையோ ராகார். தனவணிக நகரத்தார்களின் தர்மங்கள், அவ்வவற்றிற்குரிய நகரத்தார்கள் கூடிச் செய்யும் தீர்மானங்களின்படி நடைபெறுவனவாகும். அவைகளைப் பற்றிப் பேசவும் தீர்மானிக்கவும் அவைகளை நடாத்தவும் அவைகளுக்குரிய நகரத்தார்கட்கே ஆதிக்கம் உண்டு.

நகரத்தார்களால் சில ஆண்டுகளாக நிறுவப் பெற்றுள்ள சங்கங்களுக்கு, நகரத்தார்களின் வர்த்தகத் துறைகளில் இடையூறு வராமல் பாதுகாத்தல், வர்த்தக விர்த்தியை நாடுதல், பிரயாண வசதிகளைப் பேணுதல் ஆதிய காரியப் பொறுப்புகளைத்தான் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவில் அச்சங்கங்களும் தங்கள் கடமைகளைச் செவ்விதின் ஆற்றிவருகின்றன.

இந்த நிலைமையில், இப்போது நடைபெற்று வருகிற தேசீயக் கிளர்ச்சியை வியாசமாகக் கொண்டு, திருக்கோயில்களில் வெறுப்புற்ற காந்தியார், திருக்கோயில்களை அசுத்தப்படுத்தக் கருதிச் செய்த சூட்சியை அவரைப் பின்பற்றுவோ ராதரித்து, திருக்கோயில்களைப் பொதுவாகத் திறந்துவிட வேண்டுமென்ற ஒரு அடாத செயலை வெகு பரபரப்பாக மேற்கொண்டனர். அவ் வியக்கத்தார் கூற்று, பண்டைய அரசர்கள் உண்டுபண்ணி, சநாதனிகளுக்குப் பொதுவாக வுள்ள கோயில்களைக் குறித்ததேயாகும். அந்நிலைமையிலும், அந்நிலையங்களை யாக்கிய கருத்தாக்களின் கருத்தின்படிக்கும், சாஸ்திர வரம்பின்படிக்கும், ஆன்றோராசாரம் வழுவாமல்சநாதனிகட்கே யுரித்தா யிருக்கிறவைகளைச்சநாதன தர்மத்துக்கு விரோதமாகச் செய்யக்கூடாதென்று விவாதம் நடைபெறுகிறதேயல்லாமல், தனித்த ஒரு வகையார்களுக்கு உரித்தான கோவில்களைப்பற்றி விவாதமே கிடையாது.

திருப்பணிச் செல்வர்களான நகரத்தார்கள் இவ் வரலாறுகளை நன்கறிவார்கள். பிள்ளைப்பேறு கருதிப் பெண்டாட்டியைப் பறிகொடுத்தாற்போன்று, சுயராஜ்யம் பெறுவதாகக் கருதிச் சுய வுரிமையை யாரும் இழந்துவிடமாட்டார்கள்.

தனவணிக நகரத்தாருக்குக் காந்தியார் எவ்விதத்திலு முடன் பாடு[illegible] சாதி வேறு—சமயம் வேறு—ஆசாரம்



வேறு—கொள்கை வேறு—செயல் வேறு. எல்லா வகையாலும் வேறுபட்ட அவரால்—அவரது செயலால் ஆன நன்மை—ஆகும் நன்மையேதேனும் உண்டா? என்று குந்தியிருந்து சிந்தித்துப் பார்த்தாலும் ஒன்று மில்லையென்ற முடிவுக்கே வரலாம். அப்படி ஏதேனும் உண்டென்றபோதிலும், அப்போலி நன்மை கருதி, ஆணித்தரமான அறத்தின் உரிமையை யிழத்தல் தகுமா? அங்ஙனம் இழத்தற்குப் பரம்பரைத் தருமப் பிரபுக்களாகிய நகரத்தார்கள் ஒருப்படுவார்களா? காந்தியார் சொல்வதெல்லாம் வேதமென்றால், இது மாத்திரமல்ல: ஜாதிபேதங் கூடாதென்னும் கொள்கையுடைய அவர் சமயபேதம் சமய அடையாளங்களாதியவைகளும் ஒவ்வொன்றாக ஒழியவேண்டுமென்பார். அவரதுகொள்கை முடிவில் சுத்த சூனியமாக முடியுமேயல்லது ஒன்றும் உருப்படியாவதில்லை. கோயில்விளங்கக் குடிவிளங்கும் என்னும் தனிப் பெருங் கொள்கையைச்சிறப்பாகக் கொண்ட தனவணிகநகரத்தார்கள், நிலைபேறில்லாத காந்தியாரின் பச்சோந்திக் கொள்கையை யொரு சிறிதும் பொருட்படுத்திக் கொள்ளமாட்டார்கள்.

நாட்டுக்கோட்டையார் சங்கங்கள், நகரத்தார்களின் உயரிய நோக்கத்தை நாடி நிற்குமேயல்லாது மாறுபடாது. ஏதோ நவீனக் கிளர்ச்சியாளர்கள் கருத்தையொட்டி, தீண்டாதார்களுக்கு ஆலயங்களைத் திறந்துவிடச் சிபார்சு செய்தபோதிலும், அது முடிவான தீர்மானத்துக்கு வரவும், நகரத்தார்களால் அங்கீகரிக்கவும், நடைபெறவுங் கூடியதல்ல. நாட்டுக்கோட்டையார்களுக்கு உரிமையாகப் பர்மாவிலுள்ள கோவில்கள், தீண்டாதார் பிரவேசத்துக்குத் திறந்துவிடப்பட்டதென்று, சிலர் வாய்ப்பறை யடிப்பதும், பத்திரிகைகளில் வரைவதும் வெறும் புரளியே யல்லாது, உறுதியான செய்தி யாகா. தனவணிகர்களின் மூலத்தானமாகிய, தனவணிக நாட்டுக் கோயில்களில், தனவணிக நகரத்தார்கள் கொண்டுள்ள ஆசரணையை யாதாரமாகக் கொண்டுதான், அவர்கள் பொருளீட்டுதற்காக உறையும் அவ்வவ் விடங்களிலும் நடத்துவார்கள். நகரத்தார்களின் கூட்டத்தில் நிறைவேறாத தீர்மானங்களைச் சங்கம் செய்யத் தலைப்படத் தக்கதுமில்லை; தலைப்படவுமாட்டாது. ஆகவே நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் சங்கம் மாறுபட்ட புரட்சிக்காரர்களின் சார்பில் ஈடுபட்டிருப்பதாக விருதுகூறிக்கொள்ளுதல் வெறும் அபத்தமேயாகும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் சங்கங்கள் புரட்சிக்காரர்கட்கு ஒருசிறிதும் இடங்கொடாது, நாட்டுக்கோட்டையார்களின் உரிமையையும் சிறப்பையும் நிலைநாட்டுதற்கு முன்னின்றுழைத்தலையே மேற்கொள்ளும் என்பதுதான் நமது நம்பிக்கை. அவ்வாறே திருவருள் துணைபுரிவதாக!

உ

# ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். டி. முத்துசாமிஐயர்.

[‘ராய்ஸ் வீக்லி’ என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார்.]

நீதிபதி முத்துசாமி ஐயர் ஒரு வைதீக பிராமணர். விசேஷ தினங்களில் அவர் மயிலாப்பூர்க் குளத்தில் ஸ்நானம்செய்து அருகிலுள்ள சிவாலயத்திற்கு ஸ்வாமி தரிசனத்திற்காகச் செல்லுவது வழக்கம். ஒரு நாள் அவர் தடாகத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருக்கையில் ஹைகோர்ட்டு விவகாரத்திற்காக வெளியூரிலிருந்து வந்திருந்த ஒருபிராமணர் அவரைக் கண்டார். அவர் ஹைகோர்ட்டு ஜட்ஜென்பது அந்தப் பிராமணருக்குத் தெரியாது.

‘நாளை எனது தகப்பனார் சிரார்த்தம். நீங்கள் சிவப்பழமாக இருக்கிறீர்கள். நாளை பிராமணார்த்தக்காரர்களில் ஒருவராக நீங்கள் இருக்கமுடியுமா? இந்தஊர்ப் பிராமணர்களை வைப்பதில் எனக்குத் திருப்தியில்லை. ஊரிலிருந்தே வாத்தியாரை அழைத்து வந்திருக்கிறேன். என்னுடைய மருமகன் ஒருவன் இருக்கிறான். நீங்களும் ஒருவராக இருந்தால் எனக்குப் பரம திருப்தியாக இருக்கும். பிதார்க்களும் கரையேறுவார்கள்’ என்று அவர் ஸர். டி. முத்துசாமி ஐயரைப்பார்த்துச் சொன்னார்.

ஸர்.டி. முத்துசாமி ஐயருக்கு இது அதிசயத்தை விளைவித்தது. இருந்தாலும் வைதீக நெறிப்படி இது போன்ற சந்தர்ப்பங்களில் செய்து கொள்ளும் வேண்டுகோளைத் தட்டிவிடுவதற்கில்லை.

நான் பரம சந்தோஷத்துடன் இதை ஒப்புக் கொள்ளுவேன். ஆனால், என்று இழுத்துக்கொண்டு கோர்ட்டுக்குத் தாம் போகவேண்டியிருக்கிறதென்றும், சரியாக 11 மணிக்கு அங்கு இருக்கவேண்டுமென்றும் தயக்கத்துடன் சொன்னார்.

அந்தக்கிராமவாசி, “நானும் அந்த இக்கட்டில்தான் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்கு ஹைகோர்ட்டில் ஒருவியாஜ்யமிருக்கிறது. அது நாளை 11 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. நானும் அங்குபோகவேண்டும். நீங்களும் அந்தக் காலத்திற்குள் அங்கு போய்விடலாம். ததாஸ்து என்றுசொல்லி என் கவலையைப் போக்குங்கள். உங்களைப் பார்த்தால் நல்லவர்களைப்போலிருக்கிறது. நீங்கள் ஒப்புக்கொள்ளுவதை நான் பெரிய பாக்கியமெனக் கருதுவேன்.’ என்று சொல்லிப் பிரார்த்தித்தார்.

சரியென்று அவர் ஒப்புக்கொண்டு விட்டார். மறுநாட் காலையில் அவர்வரவேண்டிய வீட்டையும் கிராமவாசி அவருக்குக்காட்டி



னார். வீடுகாட்ட அவரை அழைத்துப் போகையில் எதிர்ப்பட்டோரெல்லோரும் அவரை வணங்கி மரியாதை செய்ததைக் கண்டு தகுந்தநபரைக் கண்டுபிடித்துவிட்டதாகக் கிராமவாசி பரம சந்தோஷமடைந்தார்.

“உங்களிடத்தில் எல்லோரும் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதால் உங்களை நான் குளக்கரையில் கண்டது எனது பாக்கியமென்றே கருதுகிறேன். பிதுர்க்களுக்குப் பரமதிருப்தி ஏற்படும்.” என்று அவர்சொன்னார்.

“நானும் பாபாத்மாக்களில் ஒருவன்தான். அது கடவுளுக்குத் தெரியும். இருந்தாலும் நாளைக் குறித்தகாலத்தில் நான் வந்துவிடுகிறேன்.” என்று ஜட்ஜி சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் அவ்விதமே, அவர்போய் பிராமணார்த்தம் சாப்பிட்டுக் கிராமவாசிகொடுத்த தட்சணைநான்கணாவையும் பெற்றுக்கொண்டார். அதுபோதாதென்று கிராமவாசி நினைத்து இன்னொரு நான்கணாவைநீட்டி மிகுந்த அடக்கத்துடன் இதையும் அங்கீகரிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

முதலில் ஸர். டி. முத்துசாமி ஐயர் ஆட்சேபித்தார். இருந்தாலும் கிராமவாசி பிடிவாதமாக இருந்ததால் வேறு வழியில்லையென்று நினைத்து அதையும் ஏற்றுக்கொண்டார்.

மணி பதினொன்று ஆயிற்று. ஐக்கோர்ட்டில் இந்தக்கிராமவாசி வக்கீல் பக்கத்தில் நின்றுகொண்டு தஸ்தாவேஜிகளை வரிசைப் படுத்திக்கொண்டிருந்தார்.

கட்டியங் கூறுவோன் பராக்குக் கூறிக்கொண்டே வெள்ளித் தடியுடன் வந்தான். அவனுக்குப் பின்னால் ஜட்ஜி வந்தார்.

கிராமவாசி நிமிர்ந்து பார்த்தார். அப்படியே விலவிலத்துப் போய்விட்டார். அவருடைய வீட்டில் வைதீகராகப் பிராமணார்த்தம் சாப்பிட்ட பிராமணரே நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்திருந்தார்.

[இதனால், ஐயரவர்களின் அடக்கமுடைமையும், ஆன்றோராசாரமுறை பிறழாமையும், பெருந்தகைமையும், அதிகாரச் செருக்கின்மையும், வலியார் எளியாரென்ற உயர்வுதாழ்வு கருதாத நீதியுடைமையும் உய்த்துணரத் தக்கனவாம்.]

# வீடு அடைய வழி.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் சமீபத்தில் சிதம்பரத்தில் செய்த பிரசங்கமொன்றில் வீடு அடையும் வழியைப்பற்றிப் பேசியதன் சாராம்சமாவது:—

அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கும் புருஷார்த்தங்கள். "வீடுபெறநில்" என்று ஔவையார் அருளியிருக்கின்றார். இது நாம் வசிக்கும் வீடு அல்ல. எல்லோருக்கும் சொந்தமான பொது வீடு. இந்த வீட்டையடையத்தான் வழிதேடவேண்டும். ஹிருதயம் சுத்தமாக இருந்தால் அந்த வீட்டையடையலாம். நமது ஹிருதயத்தில் சுவாமி ஆனந்தத்தாண்டவ மூர்த்தியாக வசிக்க வேண்டுமேயானால், நாம் (மோட்ச) வீடடைய வேண்டுமேயானால், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் ஆகிய குப்பைகளை அறவேயொழித்துச் சுத்தம் செய்துவிடவேண்டும். இவைகளில் ஏதாவது ஒன்று இருக்கும் பட்சத்தில் ஆண்டவன் இருக்கக்கூடிய வீட்டை அசுத்தம் செய்து அவர் வசிக்க வசதியற்றதாகச் செய்தவர்களாவோம். நாம் ஒரேநிலையாக ஆனந்தமூர்த்தியை மனதில் நிறுத்திவிட்டால் பயமற்றவர்களாகிவிட்டோம். இடி தலையில் விழுந்தபோதிலும் சரி, புலி துரத்திவந்தபோதிலும் சரி, அப்போதும் மனம் பயம் அடையாது. மேற்சொன்ன அறுவகைப் பாவங்கள் ஒருவனுக்கு இருக்கும் பட்சத்தில் அவன் அநேக ஜன்மாக்கள் எடுத்துத்தான் ஆகவேண்டும். புண்ணிய பூமியாகிய இந்நாட்டில் நாம் பிறந்திருக்கிறபொழுதே நமது மனதைச் சுத்தப்படுத்தி ஆனந்தத் தாண்டவ மூர்த்தியின் சரணங்களைத் தினம் தரிசித்தால் அவர் தம்முடைய கிருபாநோக்காகிய கண்களால் கடாட்சிப்பார். ஹிருதயத்திலும் வந்து வசிப்பார். இதற்குச் சிறுவயது முதற்கொண்டே சாதனங்கள் செய்துகொள்ளவேண்டும்.

---

## சாட்டையடி தலையிற்பெற்று வந்த எம். எல். சாமியார்.

இரங்கோனிலிருந்து வெளியாகும். 'சுதந்தரன்' எனும் புதினத் தாளில், ஸ்ரீமுக-வைகாசி-௨௦ஆ பிரசுரத்தின் 10-ம் பக்கம் இரண்டாம் பத்தியின் பகலிற் "சாட்டையடி" தலையிற்பெற்று எம். எல், என்னும் ஆங்கிலங் கலந்தசாமியாக வந்தவரும்., அவர் வரைந்த குளறுபடைகளைக் கவனிக்கும்படி அத் தாளை வெட்டி, பிழைகள் மலிந்த ஒரு கடிதத்துடன் உறையுளிட்டு அதன்மேலொட்டிய தபாற்றலையைப் பிய்த்துக்கொண்டு நட்பேட் அனுப்பிய குறுகிய புத்தியுடைய அநாமதேய அரிஜனவூழியரும் வெறுக்கத்தகுந்தவர்களாயிருத்தலின், உருவிழந்த அவ் வறிவிலிகளை ஒருசிறிதும் பொருட்படுத்தவும், அவர்கட்கு ஏதுவும் தெரிவிக்கவும் உளங்கொளற்பாலதன்றென விடுத்தாம். (ப—ர்.)

உ

# மதிப்புரை மஞ்சரி.

---

## திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா.

இது, காஞ்சீபுரம் மகாவித்வான் சபாபதி முதலியாரவர்களால் இயற்றப்பெற்றது. ஏட்டுப் பிரதியிலிருந்த இதனைப் பிழையறப் பரிசோதித்து சிலேடை, உருவகம், உவமை, திரிபு, யமகம் முதலிய அணிவகைகளும், பொருணயங்களும் யாவரும் உணர்ந்து இன்புறுமாறு, குறிப்புரை, அவ்வவ்விடைக் கின்றியமையாத ஆசிரியவசனங்கள் முதலியவற்றுடன் நமது சிவநேசஞேடிணைத்து வெளியிட உபகரித்த செந்தமிழ் போற்றுஞ் சீரியோரும் மறைத்திருவாளருமாகிய மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையராவார்கள். ஐயரவர்களின் நுணுகிய ஆராய்ச்சியும் பதிப்பின் பாங்கும் வித்தியாவிநோதர்களுக்கு விருந்தாக விளங்குவனவாம். பதிப்புரிமை ஐயரவர்கட்கே.

## சைவப் பிரகாசிகை.

யாழ்ப்பாணத்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபர் பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களால் இயற்றப்பெற்றது. சிவசரிதம், சிவனடியார் சரிதம், சிவாலய வழிபாடு முதலியவற்றை எளிய நடையில் இளைஞரும் கற்றுணரும் வண்ணம் யாக்கப்பெற்றிருக்கிறது. அவ்வவ்விடங்களுக் கிசைந்த தேவார திருவாசகமாதி அருட்பனுவல்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. கல்லூரி மாணவர்கட்கு இளமையிலேயே சைவ சமயாசாரம் பதிதற்கு இந்நூல் ஏற்றதுணையாகும். ஒவ்வொரு கலாசாலைகளிலும் இதனைப் பாட புத்தகமாக நியமித்தல், சமயவுணர்ச்சி பரவுதற்குச் சிறந்த சாதனமாம். இதன் விலை சதம்—40,

## சிவபூசை விளக்கம்.

இதுவும் ஷை குருக்களவர்களால் எழுதப்பெற்றது. சிவபூசையின் பொதுவிதி—சுத்திவகை—திரவியவகை—திரவியசுத்தி—அபிஷேகம்—பஞ்சாமிர்தம்—பஞ்சகவ்வியம்—ஆசன வகை—அங்கபேதம்—சிவ மூர்த்தங்கள்—உபசாரம்—ஆவாகனம்—கலாபேதம்—நைவேத்தியம்—ஆராதனை—நமஸ்காரம்—பிரார்த்தனை—சண்டேசுவரபூசை யாதிய சிவபூசாக்கிரமங்களை, வடமொழி தென்மொழியிலுள்ள பிரபல நூற் பிரமாணங்கொண்டு மிகவிரிவாகவும் தெளிவாகவும் விளக்கும் விழுப்பமுடையது. சிவபூசாதுரந்தரர்களின் கரபூடணமாய் விளங்

கும் தரமுடையது. சிவபூசையின் உண்மையுணராது அறியாமை யிருளான் மூடப்பட்ட அகமுடையார்க்கு,இந்நூல் அவ்விருளை யக ற்றிச் சிவவொளி பரப்பும் தேசுடையதாகும். இதன்விலை ரூ 2.

## பிரசாததீபம்.

இதனை யாக்கியோர் பெயர்தெரியவில்லை: இதிலுள்ள குரு வணக்கத்தால் இவர் சீகாழிப் பதியிலிருந்திருக்கலாமென யூகித்தற் கிடந்தருகின்றது. தன்னை யன்புடன் ஓதியுணர்வார்க்கு, மலவிரு ளகற்றிச் சிவஞானத்தைப் பிரசாதிக்கும் தன்மை யுடைமையால் இஃது இப்பெயர் எய்திற்று. சிவஞானபோத முதலிய சித்தாந்த சாஸ்திரங்களைப் பயில்வார், இதனை ஆரம்பத்தில் படித்தல் அவசிய மாகும். காப்புடன் 39 விருத்தப்பாக்களால் யாக்கப்பெற்றது. இத ற்கு,ஷை ச.குமாரசுவாமிக்குருக்களவர்கள் ஓர் சிறந்தவுரை யியற்றி, அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். சைவநன்மக்கள் இப் பிரசாதத் தைப் பெற்றுவாழ்தல் நலமாம். இதன் விலை சதம் 40.

விலாசம்:— ச. கு. வைத்தீசுவரசர்மா, அச்சுவேலி (P. O), யாழ்ப்பாணம்.

## கதிர்காமப் புராணம்

கலியுக வரதராகிய கந்தக்கடவுள் எழுந்தருளியுள்ள கதிர்காம ஸ்தல வரலாறு. இதனை, வடமொழியிலிருந்து பெயர்த்து, யாழ்ப் பாணத்து வதிரி வித்துவான் ஸ்ரீமத். சி. நாகலிங்கம் பிள்ளையவர் கள் செந்தமிழ்ச் செய்யுணடையில் இயற்றி அச்சிட்டு வெளியிட் டுள்ளார்கள். இது, கடவுள்வாழ்த்து, புராணவரலாற்றை முகத்தி ற்கொண்டு ஆற்றுப்படலம்முதல் மாதர் அருள்பெறுபடலம் ஈறாகப் பதினெட்டுப் படலங்களால் நிறைவுற்றிருக்கிறது. மொழு மொழு வெனப் பெருகியோடும் யாற்றுநீரெனச் செய்யுட்கள் ஓசையுறும் செம்பாகமாய் அமைந்து,சைவசித்தாந்த சாரங் கமழ்ந்துவிளங்குதல் ஆக்கியோரின் அறிவாற்றலை நன்கு புலப்படுத்துவதாகும். இவ்வாசி ரியர் 'ஞானசித்தி' பத்திராசிரியராகிய திரு. சி. தாமோதரம் பிள் ளையவர்களின் அருமைத்தம்பியார் ஆவர். கந்தக்கடவுட் பாசறையா கிய இக் கதிர்காம ஸ்தலமான்மியம் அன்பர்கள் யாவரும்படித்து இன்புறத் தக்கதாம். இதன் விலை சதம் 75.

[மேற்காட்டிய நூற்பிரதிகளுள் ஒவ்வொன்று எமது பார் வைக் கனுப்பிய ஆசிரியர்கட்கு எமது நன்றி யென்றும் உரிய தாகுக.] (ப—ர்.)

---

உ

186928

# சிலப்பதிகாரம்.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

(முற்றொடர்ச்சி திங்கள்-ம : பக்கம்-380.)

கோவலன், கண்ணகியின் நலம் பாராட்டுங்கால்,

'மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா யிசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னை."

என உரைப்பது சுவைமிக அளிப்பதாகும். 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்ற றியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள.' என்னுந் தேவர்திருவாக் கை இதன் முதலிரண்டடிகள் செவ்விதிற் புலப்படுத்துகின்றன. கண்ணுக் குஒளியையுமின்பத்தையுந் தருவதால் மாசறுபொன்னே என்றார். ஊற்றின் இன்பத்தால் முத்தென்றார். உயிர்ப்பின் இன்பத்தால் காசறுவிரையென்றார். சுவையினின்பத்தாற் கரும்பென்றார். தேனெனு மொழியுடையாளாய்க் கா துக்கு இன்ப மளிப்பதால் தேனென்றார். அரும்பெறற் பாவா யாருயிர் மருந் தே யென்பதால், கண்டார்யாவரும் மயங்கி உயிர் நீங்குந்தன்மையடைவா ரென்பதும், அவ்வுயிர் நீங்குதலாகிய நோய்க்கு மருந்தாகக் கண்ணகி யமைந்திருந்தா ளென்பதும் பெறப்படும். இனி,

'வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன."

என்ற அடிகளால், கோவலனது தாயார், கோவலனையுங் கண்ணகியை யும் சுற்றந்தழால் முதலிய இல்லறவாழ்க்கைக் குரிய அறங்கள் செய்யுமாறு வேறுபடுத்தி இல்லறம்நடத்தச் செய்தாளெனத் தெரிகின்றது. இவ்வாறு மாமியார், மருமகளையும் மகனையும் தனிப்படுத்தி வாழ்க்கைநடத்தச் செய் வது, நம் தனவணிக மக்களுக்கே யுரியது. இதுகொண்டும் இவர்கள் தன வணிக மரபினரென்பது அறியலாம்.

அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில், கோவலனோ டின்புற்றிருக்கும் மாதவியின் மகிழ்ச்சியையும், தனியே யிருக்கும் கண்ணகியின் கவலையையும் திறம்படவுரைக்கும் அடிகள், பத்தினிப் பெண்ணுக்குரிய தன்மைகளை விளக்குகின்றன. அவற்றுள்,

"நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் காதலற் களித்தாங்
கார்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி."

என்பன "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங், கூடி முயங்கப் பெறின்.' என்னும் திருவள்ளுவர் திருவாக்குப்படி கூடுதலும் ஊடுதலுஞ்செய்து நாயகனுக்கு ஒப்பற்ற இன்பமளித்தலே உண்மை மனைவிக் குரியதென்டதைத் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றன. நாயகனைப்பிரிந்த உண்மைநாயகிஎவ்வாறிருப்பாளென்பதைக் கண்ணகியின் கவலையைக் கூறுமுகத்தான்; கண்டு சருக்கரை காரகில் முதலியவற்றாற் புகைக்கும் புகையைத் துறந்து சிலம்பு மேகலை சிறுவியர் அஞ்சனம் திலகம் முதலியவற்றை யணியாது, சிறிது நகைமுகமில்லாராய், முலையிற் குங்கும மெழுதாராய்; ஆபரணமொன்று மணியாராய், குண்டலங்கணீங்கிய காதினரா யிருப்பரெனக் கூறுவது சாலச்சிறப்புடைத்தாம்.

"பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்."

என்ற அடிகளால், அன்னியநாட்டு மக்கள்பலர் கப்பல் மூலமாக நம் நாட்டில் வந்துகுடியேறி யிருந்தார்களெனத் தெரிகின்றது. தீர்த்தயாத்திரையால் ஒருபயனுமில்லையென வாய்ப்பறையறையு மாக்களை யடக்க,

"கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மழுகுமெய் யாளரு முழுகின ராடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்."

என்றஅடிகள் செவ்விதி னமைந்துள்ளன. திருநீலகண்டர், குளத்தில் மூழ்கி யிளமைபெற்றா ரென்பதைக் கேட்டுப் பரிகாசம் புரியும் பதடிகள், இவ்வடிகளின் திருவாக்கால் உண்மையறிந்து அமைவார்களாக.

"ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதியர்
இவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி."

என்றஅடிகள் பண்டைக்காலத்துக் காவிரிப்பூம் பட்டினத்து வாழ்ந்துவந்த தனவைசியமக்கள், அரசனுக்கு முடிசூட்டும் பெருமை பெற்றிருந்தார்களென்னுஞ் சரிதத்தை விளக்குகின்றது. அரசகுமாரர்களோடு வைசியகுமாரர்களும் தம்மிற் பொருந்தி யொன்றுபடத் திரண்டெழுந்தார்களெனில், எவ்வளவு நட்புமுறை யவர்களு ளிருந்திருக்கவேண்டும்? அவ்வாறு நெருங்கிய நட்பும் முடிசூட்டுவதனாலேயே உண்டாயிருக்க வேண்டுமென ஊகிக்க வேண்டியதிருக்கிறது.

கடலாடு காதையில் மாதவியும் கோவலனும் கடலாடப் புறப்பட்ட பொழுது, விடியற்கால மாதலின் அப்பொழுதை,



"பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்க நள்ளிருள் கடிய."

என வர்ணிக்கின்றார். இப் பொழுது வர்ணனையிலேயே மாதவியினிடத்திலிருந்து கோவலன் பிரியப்போகுந் தன்மையைக் குறிப்பாலுணர்த்துகின்றார். பொய்கைகளில், தாமரைப்பூஞ்சேக்கைகளில் துயில்கின்ற புட்கள் அச்சேக்கையை நீங்குதலான் வாய்விட்டுப்புலம்ப என்று, புட்பங்களினின்று புட்கள் பிரிவதாற் கோவலனது பிரிவையும், வைகறைக்காலத்துச் செறிந்த இருளை, வெள்ளிவிளக்கம் கடியாநிற்க என்று இருளை எப்படி வைகறையிலுதிக்கும் சுக்கிரன் போ என்று சொல்லாது தானே நீங்கும்படி செய்கிறதோ, அதுபோலக் கோவலனை மாதவி போ என்று சொல்லாது தானே நீங்குமாறு செய்யப்போகிறா ளென்பதனையும் உணர்த்துந் தன்மை அறிந்து இன்புறுதற் குரியது.

தேவந்தியினிடத்து, கண்ணகி தான்கண்ட தீக்கனாவின் றிறமுரைத்தனான்று, கண்ணகியைச் சோமதீர்த்தத்திலும், சூரியதீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்து, காமவேள் கோட்டத்திற்குச் சென்று தரிசனம்செய்யின் என்றுங்கணவரைப்பிரியாது வாழலா மாதலின் அவ்வாறு செய்துவருவோமென அழைத்த தேவந்தியினிடத்துக் கண்ணகி, அவ்வாறுசெய்தல் கற்புடைப் பெண்ணிற் கழகன் றெனக் கூறுங்கால்,

'சாமெனிற் சாத லோதை றன்னவன் றணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்ல நீர்ப்பார்."

எனச் சிந்தாமணியுட் கூறியதுபோல், கற்புடைப் பெண்டிர்க்குக் கணவனன்றி வேறு தெய்வமு மின்றென்பதனையும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்பதையும், கணவ னுயிருடனிருக்குங்கா லவனோடன்றித் தீர்த்தஸ்நானமுதலிய செய்யலாகா தென்பதனையும், 'யாமொருநா ளாடுது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள், பீடன் றெனவிருந்த பின்னர்' என்ற அடிகளாலறிவிக்கின்றார்.

"ஓவியநீள் சுவரெழுது மோவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையா னழைத்திடவாண் சித்திரமேல் யான்பாரேன்
பூவையர்தம் முருவெனினீர் பார்க்கமனம் பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால் "

என்று சித்திரத்திலுள்ள ஆணுருவத்தையும் பார்க்கப் பொறாத பாவையர் வாழ்ந்தநாடன்றோ நமதுநாடு.

கோவலனுங் கண்ணகியுங் கவுந்தியடிகளுடன் மதுரை செல்லப்புறப்பட்டபொழுது, ஆங்குவந்த சமணமுனிவர்களாகிய சாரணர்களின் கூற்றாக அமைக்கப்பெற்றுள்ள,

'அறிவ னறவோ னறிவுவா மிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
றரும முதல்வன் றலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்ம றிகழொளி
யிறைவன் குரவ னியல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கர னீசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவ னெண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளக்கொளி'

என்னும் இவ்வடிகள், அச் சமயக் கடவுளுக்கு நாற்பத்தேழு பெயர்கள் காட்டுகின்றன. இவ்வாறு, பதினான்கடிகளுள் இறைவனது திருநாமங்கள் நாற்பத்தேழைச் சொன்னயம் பொருணயந் தோன்ற அடைமொழியின்றி அமைப்பது மிகப் போற்றற்குரியதாகும். இந் நாற்பத்தேழு திருநாமங்களுக்கும் பொருளை நோக்குங்கால், இப்பெயர்கள் பரம்பொருளாகிய பரமசிவனுக்கும் பொருந்துமென்பது தெற்றென விளங்கும்.

கோவலனையுங் கண்ணகியையுந் தன்னுடைய மக்கள் என்று கவுந்தியடிகள் சொல்ல, உடன்பிறந்தோர் கணவனு மனைவியும்போல வாழ்தல் முறையாகுமோவெனக் கேட்ட விடபுருடனையும் பரத்தையையும் கவுந்தியடிகள் நரியாகுமாறு சபித்தார். அவரது சொற்களை நம்பாது பரிகாசஞ் செய்ததனாலன்றோ இவ்வாறு நேர்ந்தது.

'ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிக னெண்ணித் தீர்க்குந்
தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்ப தன்றிப்
பேசுவ தெவனோ?'

எனப் பரஞ்சோதியார் பகர்ந்தனரன்றோ? ஆகலின், அவர்களை மறுபடியும் மனிதராகும்படி செய்யவேண்டிய கோவலன் கண்ணகியினது வேண்டுகோளுக்கிணங்கி, பன்னிரண்டு திங்கள் சென்றபிறகு பழைய உருவடையுமாறு பணித்தார். இறைவ னருள்பெற்றார்க் கியலாத காரியங்களுமுண்டோ? இவ் வரலாறுகொண்டாவது பெரியோர்களை யிகழும் பேதைகள் திருந்துவார்களாக. மதுரை நகரத்து மாண்புறு பொருள்களை,

'மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல்'

'புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பில்
பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது'

'புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி'



எனப் புலவர் பாடும் புகழுறு தன்மையைப் பெற்றதெனக் கூறுதல் சாலச் சிறப்புடைத்தாம்.

கண்ணகியை அடைக்கலமாகப்பெற்ற மாதரி, அவளிடத்து,

'பொன்னிற் பொதிந்தேன் புனைபூங் கோதை
யென்னுடை நங்கை யீங்கிருக்க'

எனப் பொன்னைப்போற் போற்றுவதாகக் கூறுகின்றாள். தனது சரீரத்தையும் மனைவியையும் அடைக்கலப் பொருளையும் தன துயிரின்பொருட்டுச் சேமித்துவைத்த பொருள்களையும் பொன்னைப்போலக் காப்பாற்ற வேண்டுமென ஆசாரக்கோவை,

தன்னுடம்பு தார மடைக்கலந்தான் றன்னுயிர்க்கென்
றுன்னித்து வைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப் போற்போற்றிக் காத்துய்க்க வுய்யாக்கா
லன்றே விழுமந் தரும்.

என்னுமிச் செய்யுளால் வலியுறுத்துகின்றது. மற்றெப்பொருளையும்விடப் பொன்னையே இருப்புப்பெட்டியிற் சேமித்துவைக்க மனிதர்கள் எண்ணுவார்களாதலின், போற்றப்படு பொருளைப் பொன்னென வுன்ன வேண்டுமெனச் சாற்றினர். "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்றார் பவணந்தியார். இதனாலன்றோ, சிபிச்சக்கரவர்த்தி தனது தொடைச்சதையையு மரிந்து கொடுத்து அடைக்கலமாக வந்த புறாவைக் காத்தார்.

கண்ணகியாற் சமைக்கப்பெற்ற உணவை யுண்டு, மதுரை நகரத்துட் சென்று சிலம்பு விற்க விடை விரும்பிய கோவலன், அவளது ஒருதனி கண்டு தன்னுள்ளகம் வெதும்பி, வருபனி சுரந்த கண்ணனாயினன். ஆனால் மாதவியின் ஆடல் பாடல்களில் மயங்கி, கண்ணகியை நீங்கி மாதவிபாற் சென்றபோது, கண்ணகியின் நினைவே உண்டாகவில்லை. இப்போது, கணவனுக் குறுதுயர் தனக்குமுண்டென அவனோடு கல்லினு முள்ளினுங் களிப்பொடு நடந்துவந்த அவளது தன்மை கண்டு அவளை,

என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய் நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வீ!

எனப் பாராட்டிப் பிரியுங்காலத்துக் கண்ணீர் வருதல் இயற்கையே. அந்தோ! இக்காலத்தும், கோவலனைப்போற் செல்வமுள்ளவரை தாசிகள் கையிற் சிக்கி, அது நீங்கிய பிறகு தாசியால் துரத்தப்பெற்று, உணவுக்கும் வழியின்றித் திருமகளை யொத்த அழகினையுடைய மனைவியருந் துன்பமுற அலக்கணுறும் அறிவிலிக ளெத்தனைபே ரிருக்கின்றனர்?

கோவலன்கையிற் சிலம்புவாங்கிய பொற்கொல்லனைக் கூற்றத் தூதனென்றார். என்னையெனில்? அவனாலேயே கோவலனுயிர் நீங்கப்பெறுதலினென்க. காமபரவசனா யந்தப்புரத்திற்குச் சென்ற நெடுஞ்செழியனிடம் பொற்கொல்லன் கோவலனைத் திருடனெனக் கூறியகாலை, அவனைக்

கொல்ல ஆணையிட்டான் பாண்டியன். அந்தோ! "தையலார் மயலிற்பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ" என்னும் வாக்கியம் பொய்க்குமா? கணவனிறந்த செய்தி கேட்ட கண்ணகியின் துன்பத்தை நான்கு பாட்டுக்களா லறிவிக்கின்றார். அவற்றுள்,

'பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலொடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
யெங்கணு வென்னு வினைந்தேங்கி மாழ்குவாள்'

என்ற இச் செய்யுள், கேட்டாரையு முருக்கிக் கலங்கச்செய்யு முறையிலமைந்துள்ளது. சந்திரனு மேகமும் பூமியிற் போந்தாற்போ லழுதாளென முகமும் கூந்தலும் பூமியிற் பொருந்தக் கீழேவிழுந் தழுததனைக் குறிக்குந் திறம் சாலச் சிறப்புடைத்து.

கண்ணகி, தன் சிலம்பின் அரி இரத்தினமெனக் கூறித் தன் சிலம்பை உடைக்கச் சிந்திய இரத்தினங்களைக் கண்டு, மனைவியின் சிலம்பா முத்தாதலின் அப்பொழுதே,

'பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்'

எனக்கூறி அரியாசனத்தி லுயிர் துறந்தன னரசன். நுண்ணிய கருமமு மெண்ணித் துணிய வேண்டுவது நூன்முறையன்றோ?

கற்புடைப் பெண்டிர்க்குத் தெய்வமு மேவல்செய்யு மென்பதூஉம், அவர்கள் எண்ணம் எண்ணியாங்கே முடியு மென்பதூஉம், கண்ணகி தன திடது முலையைத்திருகி மதுரைநகரி லெறிய, அதுபோழ்து அக்கினிதேவன் பார்ப்பன வுருவோடு அவள்முன் தோன்றி, இந் நகரத்துள்ள யார் யாரை யானெரிக்க வேண்டுமெனக் கேட்க,

'பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க.'

எனக் கூறியதா லறியலாம்.

'மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்'

என்ற அடிகளால், பாண்டிய னெடுஞ்செழியனது மனைவியாகிய கோப்பெருந் தேவியினது தலைக்கற்பு தெற்றெனவிளங்கும். கணவனிறந்தால், இறந்தசெய்தி கேட்டவுட னுயிர்விடுபவள் தலைக்கற்புடையா ளென்றும், உடன் கட்டை யேறுபவ ளிடைக்கற்புடையா ளென்றும், கைம்மைநோன்பு நோற்பவள் கடைக்கற்புடையா ளென்றும் மணிமேகலையுட் கூறியமுறையில் இவள் தலைக்கற்புடையாளாவள்.



செங்குட்டுவன் சிவபக்தியின் றிறத்தை, அவன் பத்தினிக் கடவுளின் படிவஞ் சமைத்தற்குக் கற்கொண்டுவரும் பொருட்டு, இமயஞ் செல்லப் புறப்பட்டபோது, அந்நகர் ஆடகமாடமென்னுந் திருக்கோயிலி லறிதுயிலமர்ந்த பெருமானின் பிரசாதத்தைச் சிலரளிக்க, அதுகாலை யவன் சிவபெருமானது திருப்பாதுகைகளை முடியி லணிந்திருந்தன னாதலால், அதனை வாங்கித் தோளில் தாங்கிச் சென்றன னென்பதா லறியலாம்.

இனி, நூன் முடிவில் மக்களாய்ப் பிறந்தார் கைக்கொளவேண்டிய மணியனையநீதிகள் சில கூறுகின்றார். அவற்றை யிதனடியிற் காட்டி யிக் கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

"பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமு மியாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!"

---

## வினா.

சிவநேசன் ஆண்டு—௩ : திங்கள்—௮ : பக்கம்—286 ல், 'ஆசாரியமகிமை' எனத்தொடங்கி, திருவல்லிக்கேணி திரு. நல். கண்ணப்பமுதலியாரவர்களால் வெளிவந்தவற்றுள் ஏழாவது விஷயத்துக்குக் கூறும் ஆதாரம் திட்டை ஸ்தல புராணம் என்கிறார். ௸ ஸ்தல புராணம் யாண்டுளது? அப்புராணத்தில் எப் படலத்தில் கண்ணுற்றாரென்பதும் விளக்க வேண்டுதும்.

வீரவைணவன்.

---

உ

# திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாடு.

(முற்றொடர்ச்சி திங்கள்-ம:பக்கம்-368.)

"தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணந்தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ"

என்று கீதை சொல்லுகிறது. இவ்விடங்களில் கீதையைப்போல மற்ற வேதம் முதலியவைகளும் சேர்ந்ததே சாஸ்திரம் என்பது கீதையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

"ஹ்ருஷிபிர்பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை, ப்ருதக
ப்ரஹ்மஸூத்ரபதைச்சைவ ஹேதுமத்பிர்விநிச்சிதை:"

13-வது அத். 4-வது சுலோகம்.

ஆகவே, சாஸ்திர விச்வாசம் ஒவ்வொருவருக்கும் அவசியம் இருக்கவேண்டியது. சமீபத்தில் நடந்த குருவாயூர் மகாநாட்டிற்கு விஜயம் செய்த பண்டித தர்க்கரத்ன பஞ்சானனர் என்பவர் காந்திஜீயிடம் சொன்னதாக வெளியிட்ட வார்த்தையை இங்கு குறிப்பிடுவது உசிதம் என்று நினைக்கிறேன். "இப்பொழுது அன்னிய தேசத்தவர்களாலும், வெகு ஆராய்ச்சி செய்து இந்து ஸநாதன மதமே எல்லாவற்றிலும் உண்மையுள்ளதென்று நிச்சயிக்கப்படும். இம் மதத்தை நமது மதத்தில் பிறந்த தாங்கள் சிற்றறிவால் பாமர ஜனங்களின் சகாயத்தைக்கொண்டு மாற்றிவிட்டாலும், சமீபத்திலேயே வரும் நம் காலத்திலோ பிற்காலத்திலோ ஸநாதனதர்மத்தின் உண்மைகளையும், அதன் மாறுதலால் வந்த தீங்குகளையும் தெரிந்துகொண்டு, மாறுதல்செய்தவர்களைப் பழித்துக்கொண்டே இவ்வுலகில் திரும்பவும் ஸநாதனதர்மம் நிலைபெறும் என்பது திண்ணம். இதை இப்பொழுதே ரிஜிஸ்தர் செய்து கொள்ளலாம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

"தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித:"

(தர்மத்தை அழித்தால் அஃது அழியாது, நம்மைத்தான் அழிக்கும், தர்மத்தைக் காப்பாற்றினால் அது நம்மைக் காக்கும்.) என்ற மனுவசனத்தின்படி நமக்கு எல்லாவிதத்திலும் நன்மை பயக்கக்கூடிய ஸநாதன தர்மத்தைக் காக்கவேண்டியது நமது கடமை. "ந ஜாது காமாந்நபயாந்ந லோபாதுர்மே த்யஜேஜ்ஜீவிதஸ்யாபி ஹேதோ" (உயிரைக் கொடுத்தாவது தர்மத்தைக் காக்கவேண்டும்) என்ற பாரதவசனத்தைக்கொண்டு தர்மவீரர்களாகிய நம்மவர்கள் ஸநாதன தர்மத்தைக் கைவிடமாட்டார்கள் என்பது எனது துணிபு.



இதுபற்றியே நமது பூர்வீக அரசர்கள் தங்கள் சரீரத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எவ்வகைப் பிராணிகளையும் ரக்ஷித்துத் தர்மத்தைக் காத்திருக்கின்றார்கள்.

"கர்ணஸ்த்வசம் சிபிர்மோம்ஸ ப்ராணான் ஜீமூதவாஹன: ததௌ ததீசிரஸ்தீநி கின்னதேயம் மஹாத்மநாம்" இதுபற்றியே "ஏகாந்தவித்வம்ஸிஷு மத்விதாநாம் பிண்டேஷ்வநாஸ்தா கலு பௌதிகேஷு" என்று காளிதாசரும் கூறுகின்றார். நச்வரமான சரீரத்தில் பெரியோர்களுக்குப் பற்றுதல் கிடையாதென்பது இதன் பொருள்.

"ஸர்வாசுசிநிதானஸ்ய க்ருதக்நஸ்ய விநாசிந:
சரீரகஸ்யாபி க்ருதே மூடா: பாபாநி குர்வதே"

(கேவலமாயும் அழிவுள்ளதுமாயுமுள்ள சரீரத்தின்பொருட்டு தர்மத்தை விடுபவர்கள் மூடர்கள்) என்று இப்படிப்பலவாறாக நிந்திக்கப்படுகிற சரீரத்தின் நன்மைக்காக ப்ராசீன தர்மத்தைக் கைவிடக்கூடாதென்பது இந்துக்களின் கொள்கை.

"அர்த்தசாஸ்த்ராத்து பலவத்தர்மசாஸ்த்ரமிதி ஸ்திதி:"

என்ற தர்மசாஸ்திரத்தின்படி ராஜீய விஷயத்தைக்காட்டிலும் நமது ஸநாதன தர்மமே மேலானது. ராஜீய விஷயத்திலும் இத் தீண்டாமை விலக்குவதாலும், ஆலயப்பிரவேசத்தாலும் யாதொரு நன்மையும் கிடைக்காதென்பது மேலே குறிப்பிடப்படுகிறது. இப்பொழுது நமது தர்மத்தைக் கைவிட்டால் ஸ்வராஜ்யம் நமக்கு நிச்சயமாய் கிடைக்குமென்று யாராலாவது உறுதிகூற முடியுமா?

இதற்குமுன், "ஒரு லக்ஷம் ரூபாய் சேர்த்தால் நாளை ஸ்வராஜ்யம்; கதராணிந்தால் ஸ்வராஜ்யம்; சட்டமறுப்புச்செய்தால் ஸ்வராஜ்யம்." என்று சொன்னவைகள் வீணாகிவிட்டதை நமது ஜனங்கள் இன்னும் மறக்கவில்லை. மகம்மதியர்களைத் தமது இஷ்டம்போல் செய்துகொள்ளவேண்டுமென்று பெரு முயற்சி செய்ததும் பயன்படவில்லையே. நமது ஜனங்களை இன்னும் பலவாறாகத் துன்புறச்செய்வது மஹாத்மாவுக்கு அழகா? தீண்டாதாருக்கும் ஏனையோருக்கும் பெரிய வேற்றுமை உண்டுபண்ணிக் கொண்டிருப்பதுதான் இவர்கள் தற்பொழுது உலகத்திற்குச் செய்யும் நன்மை.

இனி, காந்திஜீ முதலியவர்கள் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் முதலியவை செய்யாவிடில், தாங்கள் உபவாசமிருந்து உயிரையும் மாய்த்துக்கொள்வோமென்பார்கள். ஆனால், தீண்டாதாரை ஆலயத்திற்குள் விட்டுவிட்டால் எத்தனை காலம் ஜீவித்திருப்பார்கள் என்று காந்திஜீயாலோ, அல்லது அவரது சிஷ்யர்களாலோ உறுதி சொல்ல முடியுமா? இம்மாதிரி தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக எத்தனை ஆயிரம் பெரியோர்கள் உபவாசமிருப்பார்கள் என்பதை

இவர்கள் அறியார்கள்போலும். நாம் மேல்நாட்டுக் கல்வியால் மதப்பற்றற்றுப் பலவகையாலும் மாறுபட்டு இருக்கிறோம். அக் கல்வி நமது ஸனாதன தர்மத்தை உள்ளூர அரித்துக்கொண்டிருக்கிறது. நமக்கு இதுபோன்ற கஷ்டங்கள் வந்ததும் அக் கல்வியால்தான். இனியாவது நம் தேசபாஷை, சமயக் கல்வி, ஸம்ஸ்கிருதப் படிப்பு முதலியவைகளை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்.

இதுவரை நமது தர்மம் பிறரால் தாக்கப்பட்டிருப்பினும் குலைந்துவிடவில்லை. பிறர் பரிஹஸித்தாலும் தர்மத்தில் அபிமானம் நம்மை விடவில்லை; விடப்போவதுமில்லை. வர்ணாச்ரம பாகுபாடுகளையுடைய எல்லா இந்துக்களும், மனிதனது தேகத்தில் ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு வேலையைச் செய்வதுபோல, சமூகமாகிற தேகத்தில் பல பாகங்களாக இருந்து அனேக வேலைகளைச் செய்கிறார்கள். ஆனால், இவ்வாறு பல உட்பிரிவுகளிருந்தாலும், மொத்தத்தில் இவை எல்லாம் ஒன்று என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தேகத்தில் எல்லா உறுப்புக்களும் எல்லா வேலைகளையும் செய்வதென்றால் குழப்பமாகவே முடியுமல்லாது பயன் ஒன்றுமடைய முடியாது. இவ் வேறுபாடுகள் இல்லாமல் செய்வது அனுபவத்தில் முடியாத காரியம். ஒருவேளை முடிந்தாலும் அதை ஒருவரும் விரும்பவும் மாட்டார்கள். உதாரணமாக: காந்திஜீ ஏ வகுப்புக் கைதியாகவும், மற்ற ராஜீயச் சிறையாளர்கள் இரண்டாவது மூன்றாவது வகுப்பினர்களாகவுமிருக்கிறார்கள். ஏனிப்படியிருக்கவேண்டும் என்றால், பேதம் இயற்கை என்பதைத் தவிர வேறு சமாதானம் கூற முடியுமா? ஒருவன் சுகமடைய வேண்டுமானால் பிறர் கஷ்டப்பட்டால்தான் என்பது அனுபவம். உலகில் பெரியவன், சிறியவன், தனிகன், எளியவன் முதலிய பிரிவு இல்லாதிருக்கச்செய்ய முடியுமா? இவ்வித முயற்சி போலவே தீண்டாமை விலக்குவதற்கான முயற்சிகள் இருக்கின்றன. ஆனால், இந்துக்கள் எல்லோருக்கும் லக்ஷியம் ஒன்றுதானென்பது நமது மதத்தின் தெளிவு. அதற்கு வழிகள் மட்டும் அவரவர் ஜாதிகளுக்கும், யோக்யதைகளுக்கும் தக்கவாறு வெவ்வேறாக இருக்கின்றன.

இவ்விடத்தில் ஒன்று கூறவேண்டியிருக்கிறது. நமது தர்மத்தைக்காக்க நான்காம் வருணத்திய நண்பர்களும் ஒன்றுசேர்ந்து முன்வரவேண்டும். பலவிடங்களில் அவர்கள் முன்வராமலிருப்பது வருந்தத்தக்கது. ஏனென்றால், அவர்களைக்கொண்டும் நமது இந்துசமூகம் இதுவரை விருத்தியடைந்திருக்கிறது. இதுபற்றியே புருஷஸூக்தத்தில் நான்காம் வருணத்தவர்களைப் பகவானது பாதஸ்தானீயர்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காலில்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியாததுபோல் உலக நன்மைக்கு நான்காம்



வருணத்தவர்கள் அடிப்படையானவர்கள் என்பது இதன் பொருள். ஆகையால், நமது முன்னோர்களின் ஆசாரங்களைக் காப்பாற்ற ஒன்றுசேர்ந்து எல்லா ஜாதியினரும் பாடுபட வேண்டியது அவசியமாகும்.

## சாஸ்திரங்களின் பெருமை.

"நமது தர்மத்திற்கு எஜமானன் கடவுளே. (தர்மஸ்ய ப்ரபுரச்யுத) அந்தத் தர்மத்திற்கு முக்கியமான பிரமாணங்கள் வேதம், ஸ்மிருதி, ஆகமம் முதலியன. உலகில் வேதத்தைக்காட்டிலும் உயர்ந்த சாஸ்திரம் கிடையாது. (வேதாச்சாஸ்த்ரம் பர்நாஸ்தி) இந்து வேதம் ஒருவனால் உண்டுபண்ணப்பட்டதில்லை. இதுவரை ஆராய்ச்சி செய்தவர்கள் வேதத்தைச் சுமார் 5000 வருஷங்களுக்குமுன் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். அக்காலத்திலும் வேதத்தைச் செய்தவன் பெயர் கண்டுபிடிக்கப்படவில்லை. மற்ற மதங்களுக்குள்ள பிரமாணங்கள் ஒவ்வொருவரால் செய்யப்பட்டிருப்பதாக நாளிதுவரை நன்றாகத் தெரியவருகின்றன. ஆகையால், வேதம்போல் பிரபல பிரமாணம் உலகில் கிடையாது. இனி, அவ் வேதத்தின் அர்த்த ஸூக்ஷ்மங்களை நம் க்ஷேமத்திற்காக ஆர்ஷப்ரக்ஞையை உடைய மனு முதலிய ரிஷிகள் ஸ்மிருதிகள் மூலமாக உதவினார்கள். ஆகையால், அந்த ஸ்மிருதி, இதிஹாஸ புராண ஆகமங்களும், நமது ஸனாதன தர்மத்திற்குப் பிரமாணங்களாகின்றன. இந்த ஸ்மிருதி முதலியவற்றைச் சிலர் நம்பமாட்டோமென்கிறார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது. இந்த மனு முதலிய ரிஷிகள் சுமார் 2500 வருஷங்களுக்கு முன் இருந்தவர்கள் என்றும், அக்காலத்திலேயே இந்த ஸ்மிருதிகள் உண்டாகிவிட்டனவென்றும், எல்லாச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் இப்பொழுதும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அக்காலத்தில் ரிஷிகள் இம்மாதிரியான ஸ்மிருதிகளை எழுதிவைத்ததற்கு யாது பயனென்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். நம்மை ஏமாற்றுவதற்கா? அப்படி ஏமாற்றுவதால் அவர்கள் அடைந்த லாபமென்ன? அப்படி லாபமுண்டானாலும் அக்காலத்திருந்தவர்களுக்கு உபதேசித்தால் போதாதா! புஸ்தகங்களாக ஏன் எழுதிவைக்கவேண்டும்? அக்காலம்முதல் நாளிதுவரை நம் முன்னோர்கள் இந்த ரிஷிகளின் ஏமாற்றத்தில் அகப்பட்டுக்கொண்டார்களா? நம் முன்னோர்கள் அறிவில்லாதவர்களா? எத்தனை கோடிக்கணக்கான முன்னோர்கள் இந்த ஸ்மிருதி முதலியவைகளை நம்பி ஆதரித்துவந்தார்கள்? நாம் அவர்களின் சந்ததிகளல்லவா? அவர்களடைந்த சுகத்தைக்காட்டிலும் இதனால் அதிக சுகம் கிடைக்குமென்று யாராலாவது உறுதி கூற முடியுமா? உலகத்தில் அதி மேதாவிகளான பல்லாயிரக்கணக்கான நம் முன்னோர்களைத் தெரியாதவர்களென்று சொல்வதைக் காட்டிலும், தான் ஒருவனே தெரியாதவனென்று ஒத்துக்கொள்

ளுதல் புத்திமான்களுக்கு அழகு. இதுவரை தர்மத்தைத் தழுவி நடந்ததற்காக எல்லோரும் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று காந்திஜீ சொல்லுகிறார். இவ் வார்த்தை சொன்னதற்காக அவரே உபவாசம், சிறைவாசம் முதலிய பிராயச்சித்தம் செய்ய நேர்ந்ததென்பது திண்ணம். நாம் எப்பொழுதும் பெரியோர்கள் சொல்வதையும், சாஸ்திரங்கள் சொல்வதையும் நம்புகிறவர்கள். சிராத்தம் முதலிய எல்லாக்காரியங்களையும், பொருட் செலவையும் சரீர சிரமத்தையும்பாராது சாஸ்திர நம்பிக்கையால்தான் செய்துகொண்டிருக்கிறோம். நமது தந்தை முதலானவர்களை நாம் எதைக்கொண்டு தெரிந்து கொள்ளுகிறோம்? தகப்பன் இன்னானென்று கண்ணுக்குத் தெரியுமா? நமதுக்ஷேமத்தைக் கருதுகிற பெரியோர்களின் சொற்களையே நம்பித்தான் இவைகளை நிச்சயித்துக் கொண்டிருக்கிறோம். தந்தையின் சொத்துரிமையை இதைக் கொண்டுதான் அடைகிறோம். இப்பொழுது காந்திஜீ உபந்நியஸித்ததாக எதாவது பேப்பர்களில் காணப்பட்டால் அதைப் பார்த்து காந்திஜீ நேரில் சொல்வதாகக் கொண்டு எத்தனையோ கஷ்டங்களுக்கு நாம் ஆளாகிக்கொண்டிருக்கிறோம். காந்திஜீயை அநேகர் நேரில் பார்த்ததில்லை. அவர் பேசுவதையும் கேட்டதில்லை. அவர் சொன்னதாக பேப்பர்களில் யாராவது தங்களிட்டம்போல் எழுதிவிட்டால், ஜனங்களுக்கு அதில் என்ன நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது பாருங்கள். இதையே நாம் நம்பும்பொழுது, நமது நன்மைக்காக முன்னோர் எழுதிவைத்த ஸ்மிருதி முதலியவைகளை நாம் நம்ப வேண்டியது அவசியமல்லவா?

"தஸ்மாச்ச ஸ்த்ரோ க்ரமாணந் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ"

என்றது கீதை. இன்னும் நமது ரிஷிகளின் ஞானத்தில் ஆயிரத்தில் ஒருபங்கு கூட இவர்களுக்கில்லை என்பது நிச்சயம். தனது காரியத்திற்காக சமயம்போல் எல்லாம் பேசுகிறவர்கள். நம் ரிஷிகள் சுகாதாரம், கோர்ட்டு லா, சாக்ஷிவியவகாரம், ஆயுர்வேதம், ராஜநீதி, தத்வவிசாரம் முதலிய எல்லாவிஷயங்களையும் எவ்வளவு உண்மையுடன் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின்புஸ்தகங்களைப் படித்தால் தெரியவரும். பகவானுடன் நேரில் பேசி தர்மத்தை உண்மையுடன் தெரிந்துகொண்டு, ஜனங்களுக்கு அநேக சபதங்களால் மெய்ப்பித்துக் காண்பித்திருக்கிறார்கள். அத்தகைய பெரியோர்களின் பெயரையும் சொல்ல யோக்யதையில்லாத இவர்கள், அவர்களுடன் தங்களை ஒப்பிட்டுச் சொல்வது அறிவீனமே. இதையும் நம்மிந்துக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் எழுதிவிடுகிறார்கள். இவர்களிடம் நேரில் கேட்டால், நான் சாஸ்திரம் படிக்கவில்லை; என் மனச்சாட்சி இப்படிக் கூறுகிறது என்கிறார்கள். ஆனால், நமது சாஸ்திரங்கட்கு எத்தனை கோடிக்கணக்



கான பெரியோர்களின் மனச்சாட்சிகள் இருக்கின்றன என்று ஆலோசித்துப் பாருங்கள்.

## மசோதாக்களும் சட்டசபைகளும்.

இப்பொழுது நமது தர்மத்தை அழிப்பதான மசோதாக்கள் பல சட்டசபைகளில் தோன்றி யிருப்பதாகத் தெரியவருகின்றன. அவை தீண்டாமை விலக்கு, தீண்டாதாரின் ஆலயப்பிரவேசம், விவாக ரத்து மசோதா முதலியவைகள். காங்கிரஸ் வாதிகள் சட்டசபைகளைப்பகிஷ்கரிக்கவேண்டும், சட்டங்களை மறுக்கவேண்டுமென்றுசொல்லிவிட்டு, இப்பொழுது சட்டசபைகளையே சரணம்செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தோ! இவர்களின் கதி என்னவாயின? சட்டசபைகள் மதவிஷயங்களில் தலையிடுவது முற்றிலும் தவறு. இன்று ஒரு மெஜாரிட்டியைக் கொண்டு ஒருமதத்தை அழித்துவிட்டால், பிறகு வேறொரு மெஜாரிட்டி அதை மாற்றவேண்டிவரும். ஆகவே, ஜனங்களின் மதமும் தினந்தோறும் மாறிக்கொண்டுவர நேரிடும். ஓட்டுமூலம் மெஜாரிட்டி தீர்மானிப்பதின் உண்மை இன்னதென்று நாம் நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படித் தினந்தோறும் மாறிக்கொண்டுவருவது மதமாகுமா? அப்படி எந்த மதமாவது மாறிக்கொண்டே வருகிறதா? எக்காலத்திலும், எவ்விடத்திலும் ஒரே ஜாதியல்லது ஒரேமதம் நிலைநிறுத்த முடியாது. வெவ்வேறு சட்டசபைகள் மதங்களை வெவ்வேறாக மாற்றநேரிடும். அப்பொழுது நமது வாதிகள் நினைக்கிறபடி சமூக ஒற்றுமையில்லாததோடு வேற்றுமையே நாளுக்குநாள் அதிகரிக்கும். சீர்திருத்தமென்பது புதியதொரு பாகுபாட்டைச் சேர்ப்பதைத்தவிர வேறில்லை. அந்தந்தமதங்களைப் பெரிதும் உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அநேகர் பெருமுயற்சிகள் செய்துவரு மிந்நாளில் நமது பரிசுத்த இந்துமதத்தை நம்மவர்களேகெடுக்க முயல்வது ஆச்சர்யமாக இருக்கிறது. இனி, பலாத்காரத்தினால் இந்து ஸமூகத்தையும் மதத்தையும் அழிக்க நினைத்துச் சட்டமியற்றினால், சநாதனிகள் சட்டமறுப்புச் செய்வார்களென்பதை அரசாங்கத்தை விரோதித்துச் சட்டமறுப்புச் செய்யத் துணிந்த காந்திஜீ முதலியவர்கள் அறியாமலிருப்பதற்கு இல்லை. ஆனால், ராஜவிச்வாசத்துடன் தனது கடமைகளைச் செய்துகொண்டிருக்கும் ஸநாதனிகளைப் பலாத்காரமாகச் சட்டமறுப்பில் இறங்கும்படி நமது காருண்ணிய கவர்மெண்டார் செய்ய மாட்டார்கள் என்று ஸநாதனிகளாகிய நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். ராஜீய விஷயத்தில் சனங்கட்கு நலத்தை உண்டுபண்ணுவதற்காகவே சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தீண்டாதார்களும் ஹரிசனநாமதேயமும் இப்பொழுது பஞ்சமர்களுக்கு ஆலயப்பிரவேசம் முதலியவற்றில் உரிமை இருப்பதாகக் கருதி, அதற்கேற்ப அவர்களுக்கு ஹரிஜனங்கள் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்கள் என்று பெயரிடப்பட்டால்

கோவில் வந்துவிடுமா? இப்பெயர் புதிதாக ஏற்பட்டதென்பது எல்லோருக்கும் தெரியுமல்லவா? இப்பெயர் வைப்பதற்கு முன் அவர்களுக்கு ஆலயப்பிரவேசத்தில் யோக்யதையில்லை என்பதை காந்திஜீ ஒப்புக்கொள்கிறாரா? இதில் ஹரி என்பதற்குத் தவளை, குரங்கு, விஷ்ணு என்று அநேக அர்த்தங்கள் இருக்கின்றன. இவற்றில் விஷ்ணு என்ற அர்த்தம் கொண்டால், சிவாலயங்களுக்குள் தீண்டாதார்களுக்குப் போக உரிமை யில்லை என்று ஏற்படும். அதைக் காந்திஜீ ஒப்புக்கொள்ளுகிறாரா? பின் விஷ்ணு என்ற அர்த்தமில்லாமல் வேறுஅர்த்தமானால் இக்கிளர்ச்சிக்கு அப்பெயர் விரோதமல்லவா? இன்னும் ஆதி இந்துக்கள் என்றும், ஆதித் திராவிடர்கள் என்றும், தாழ்ந்தவர்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், அவர்ணஇந்துக்கள்என்றும்பலவாறாகத்தீண்டாதார்களைத்தினம் ஒரு பெயராகவைத்து ஏளனம் செய்துவருகிறார்கள். ஆகையால் அவர்களுக்குப் பழைய தீண்டாதார்கள் என்றபெயர்தான் பொருந்துமேயல்லாது தர்மத்திற்கு விரோதமாகப் புதிதாகப் பெயர் வைத்தால் தப்பாகவே முடியுமென்று இனியாவது காந்திஜீ முதலியவர்கள் தெரிந்துகொள்வார்களா? இனித் தீண்டாமை விலக்குவதாலும் ஆலயப்பிரவேசத்தாலும் வரும்பயன் என்னஎன்று விசாரிப்பாம்.

இத்தீண்டாமையால் நமது இந்து சமூகத்தில் பெரும்பாலோர் இம்மதத்தை விட்டு கிருஸ்தவ மதத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். இனியும் இம்மாதிரி தீண்டாமை முதலியன இருக்குமானால் நமது இந்து சமூகமே நாளடைவில் இல்லாமற் போவதோடு தற்காலத்திலும் இந்து சமூகத்திற்குப் பலம் குன்றி, மற்றவர்களால் தாக்கப்பட்டு, ராஜீயவிஷயத்திலும் இந்துக்களாகிய நம்மவர்கள் யாதொரு நன்மையையும், அடைய முடியாமலிருக்கிறார்கள். இத்தீண்டாமை ஒழிந்தால், சமூகத்தில் ஒற்றுமை ஏற்பட்டு, எல்லாவற்றிலும் இந்துக்களுக்கு சௌகரியம் ஏற்படும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இதன் உண்மையைச்சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும். கிருஸ்துவ மதம் நம்நாட்டில் பரவ ஆரம்பித்து சுவல்ப காலந்தான் ஆகிறது. அதற்குமுன் இத்தீண்டாமை இருந்திருக்கிறது. அப்பொழுது ஜனங்களிடத்து யாதொரு வேற்றுமையு மில்லாமல், எல்லோரும் ஒன்று கூடிப் பல காரியங்களைச் செய்திருக்கவில்லையா? உலகத்தில் அந்தந்த அரசாங்கத்திற்குத் தக்கவாறு மதமாறுதல் உண்டாவது சகஜம். தீண்டாதார்கள் தவிர மற்றச்சாதிகளில் எத்தனையோ பேர்கள் கிருஸ்துவர்களாகி இருக்கிறார்களே. அதற்குக் காரணம் இத்தீண்டாமையா? இப்பொழுது அரசாங்கத்தாரின் உதவியால் (Christianity க்கு) கிருஸ்துவமதத்திற்குக் கோடிக்கணக்கான பணங்கள் வருஷந்தோறும் செலவழிந்து வருகிற விஷயம் எல்லோரும் நன்கு அறிந்திருக்கிறார்கள். அதைப்பற்றி சமாசாரப் பத்திரிகைகள் வெகுவாக எழுதிக்கொண்டிருக்கின்றன. (வரும்.)

உ

# சிவபெருமானே தியானிக்கற்பாலர்.

[அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்.]

அயன், அச்சுதன், அமரர்கள் என்னும் பெயர்கள் முறையே பிர்மா, விட்டுணு, தேவர்களுக்கு உபசாரமாம். அயன் பிறவாதவன் எனவும், அச்சுதன் அழியாதவன் எனவும், அமரர் மரியாதவர் எனவும் பொருள்படும். அங்ஙனம் பொருள்படவே பிறவாதவர் அழியாதவர், அழியாதவர் பிறவாதவர் என்றும் கூறப்படுதலினால் பிரமவிட்டுணு முதலாயினோர் பதியாவர் போலுமாலோ எனின், அது,

நூறு கோடி பிரமர்க ளொழிந்தனர்
ஆறு கோடி நராயண ரங்ஙனே
யேறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே.

என்னுந் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தானும்,

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம்.

என்னும் திருவாசகத்தானும்,

சிறப்பு ளவருந் தவஞ்செய்து நீரினி
யுறப்படு கதிமுறை யுரைப்பக் கேட்டிரால்
பிறப்பு ளதிட ருளதன்றிப் பின்னரு
மிறப்புள ததுநமக் கினிய தாகுமோ.

என்னும் கந்தபுராணச் செய்யுளானும் மறுக்கப்படும். அச்சுதன் அயன் அமரர் ஆகிய பெயர்கள் அவர்களுக்கு முகமனும் என்பது, சிங்கமுகன் சூரனுக்குச் சொல்லிய பொருளையுடைய,

அச்சு தன்னய னமரரா கியபெய ரவர்க்கு
நிச்ச யம்படு முகமனே யானபோ னினது
வச்சி ரத்தனி யாக்கையு மழிவிலா வரமு
முச்ச கந்தொழப் பல்லுக மிருத்தலாய் முடியும்.

(அமைச்சியல்-கச0)

என்னுஞ் செய்யுளாலறிக. சிவபெருமானுக்கு அச்சுதன் என்னும் பெயருண்மை 'அச்சுதனஞ்சிவன்' (அவைபுகு: அ) என்பதாலறிக.

வேதம் புராணம் முதலிய நூல்களிலே தேவர்களெல்லாம் பிறந்துமரித்தல் சொல்லப்படுதலானும், சிவனுக்கு அஃதுண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையானும், முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது செவ்விதிற் றுணியப்படும்.

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

(கந்தபு: கடவுள்வாழ்த்து. ௩.)

பிரமவிட்டுணு முதலிய தேவர்களைச் சிருட்டிகருத்தா, திதிகருத்தா, சங்காரகருத்தா என்பதும் முகமனேயாம். சிலர் மனுடரைத் தேவரென்பர். தேவரை மும்மூர்த்திகளென்பர். பிரமவிட்டுணுக்களாகிய இருவரையும் பரம்பொருளென்பர். இந்தச் சொற்றிறங்களெல்லாம் முகமனேயாம். (அவைபுகு: ௧௨௫) சிவபெருமான் அருளிச்செய்தவேதங்கள் பஞ்சபூதங்களையும் உயிர்களையும் மற்றைத் தேவர்களையும் பிரமம் என்று சொல்வதென்னையெனின், அழியாத சிவபெருமானைக் குறித்து வேதங்கள் கூறியவைகள் மாத்திரம் விதிவாதமும், ஒழிந்தன துதிவாதமுமாம். ஒருபொருளைப் புகழவேண்டினால் அதன் நிலைமைக்கு மேலாகவும் புகழலாம். அஃது உலகத்தார் பிராமணர்களைப் பிரமா என்று சொல்லுதல்போலும். இதற்குப் பிரமாணம்,

'என்னலுங் கமலத் தண்ண லியாவருந் தெரித றேற்று
வுன்னரும் பெற்றி யீதென் றுணர்தரக் கேட்டி யன்னான்
சொன்னதோர் மறைக டம்மிற் றுணிபுகே ளிறுதி யில்லா
முன்னவற் காத லுண்மை யொழிந்தன முகம னாமால்.'

'ஆதலா லீச னல்லா லனைவர்க்கு முயிர்க்கு மைந்தாம்
பூதமா னவைக்கு மேற்றம் புகலுதன் முகம னாகு
மோதலா மேல தாக வொருபொருள் புகழ வேண்டின்
வேதபா ரகரை யன்றே யானென விளம்பு கின்றார்'

எனவரும் கந்தபுராணம் உபதேசப்படலம் ௧௫,௧௬-ம்செய்யுட்களைக் காண்க.

வேதங்களிலே விட்டுணுவுக்குக் கூறப்பட்ட பெருமையும், பிரமன் இந்திரன் அக்கினிமுதலியோருக்குக் கூறப்பட்ட பெருமையுமாகிய எல்லாம் சுருங்கிய பொருள்படும். அதர்வசிகையிற் கூறப்பட்டவாறு ஏனையரிற் பிரித்துத் தலைமை சொல்லாமையால் ஈசுர சத்தம் காரணத்தாற் பிறகடவுளை யுணர்த்துமேனும், யோகரூடியினால் சிவபெருமானையே யுணர்த்தலின் அஃது அவருக்கே உரியபெய



ராம். நிகண்டு நூலுடையாரும் சிவன் முதலிய நாமங்கள் போல இதனையும் சிவ நாமமாகக் கொண்டு ஓதுவதும் காண்க. இவ்வாற்றால் அளவிடப்படாத ஐசுவரிய முண்மை சிவபெருமானுக்கே சித்தித்தலின் வணங்கப்படுந்தன்மை அவருக்கே உரித்தாமென்க. இதுபற்றியன்றே வேதங்கள் சிவபெருமானுக்கே பெரும்பான்மைவணக்கவாக்கியம் கூறியதூஉம் என்க. நான்கு வேதங்களில் ஒருபாகம் சிவபெருமானுடைய மேன்மையைக்கூறும்; பிரமாவையும் தேவர்களையும் ஏனைப்பூதங்களையும் பலபொருள்களையும் மற்றைப் பாதிதான் கூறும்.

'நான்மறை தனிலோர் பாக நாரமார் கடவுட் சென்னி
மேன்மைய தியம்பு மெய்ம்மை விண்ணவர் தம்மை யேனைப்
பான்மைகொள் பூதந் தன்னைப் பல்பொரு டனையும் பாதி
தான்மொழிந் திடுமா லீது தவறல வுணர்தி தக்கோய்.'

(உபதேசப்படலம்-௨௮.)

சிவபெருமானை யொழிந்த ஏனைத்தேவர்களுக்கும் வேதத்தில் அங்கங்கே வணக்கங்கூறியது என்னை எனின், ஆற்றுநீர் கடலை அடையுமாறுபோல ஏனைத்தேவர்கள்மாட்டுக் கூறப்பட்ட வணக்கங்கள் சிவபெருமானையே சென்றடைதலின் அங்ஙனம் கூறப்பட்டதென்க.

'யாதொரு பொருளை யாவ ரிறைஞ்சினு மதுபோய் முக்க
ணாதியை யடையு மம்மா வங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன்புக ழனைத்து மேலா
நாதனை யணுகு மெல்லா நதிகளுங் கடல்சென் றென்ன.'

(உபதேசப்படலம்-௧௭)

சிவபெருமானையே சென்றடையும் என்பது, 'ஸ்தோமம் வோ அத்ய ருத்ராய' (ருக்வே ம-௧௩—௧) என்னும்மந்திரத்தால் அறியப்படும்.

பாதநூலாரும் இந்திரன் பிரமன் விட்டுணு என்னுந் தேவர்களுக்கு முறையே கமலம் வச்சிரம் சங்கம் என்னும் முத்திரைகளானும், சிவபெருமானுக்குச் சிரசில் அஞ்சலிமுத்திரையானும் அபிநயம் கூறியதும் காண்க.

பிரமவிட்டுணுக்களைச் சிவபெருமானுக்கு அன்பர்களென்றும் அவருடைய தொண்டைச்செய்து அவரருளால் செல்வமெல்லாம் பெற்று உயிர்பிழைத்து வாழுந்தேவர்களென்றுந் தோத்திரஞ்செய்வாருக்கே அவர்கள் அருள்செய்வார்கள். பிரமவிட்டுணுக்களைப்பரம்பொருள் என்று நினைத்து, சிவபெருமானைப் போலச் சிறப்புச் செய்கின்றவர்களும், சிவபெருமானுக்குச் சமம் என்று சொல்லுகின்றவர்களும் எப்பிறப்பிலுந் துன்பக் கடலுள் ஆழ்வார்கள்.

காணுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்ப
ரானவ ரென்று மன்னூற் கடித்தொழில் புரிந்து வாழும்
வானவ ரென்று மெம்மை வழுத்தினர்க் கருள்வோ மல்லா
லேனையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே யிருத்தும் யாமே.

நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைகொ ணெஞ்சர் தீரா விழுமவெந் நிரயம் வீழ்வர்
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்கள்
எம்மையுந் துயர மென்னு மிருங்கடற் படுப்ப ரன்றே.

என்று உபதேசப் படலத்திலே பிரமாவினது வாய்ப்பிறந்த வாக்கினாலும் செவ்விதிற் றுணியப்படும்.

தேவர்கள் சிவபெருமானது கிருபையினாலேயே உயிர் பிழைத்துச் செல்வங்களை யெல்லாம் அவரிடத்துப் பெற்றுக்கொண்டார்கள். திருக்குற்றாலப் படலம் செ-க:— "செற்றால முயிரனைத்து முண்டிடவே நிமிர்ந்தெழலுஞ் சிந்தை மேற்கொள், பற்றாலங் கதுநுகர்ந்து நான்முகனே முதலோர்தம் பாவை மார்கள், பொற்றாலி தனையளித்தோன் புகழ்போற்றி". பிரம விட்டுணு முதலிய தேவர்கள் தங்கள் அரசியலை நடாத்துப்படி சிவபெருமானுடைய திருவடிகளைப்பூசித்துத் துதித்த ஆலயங்களால் இவ்வுண்மை தெளிந்துகொள்ளலாம்.

பிரமன் முதலிய தேவர்கள் தம்மைக் குறித்துச் செய்யப்படும் வணக்கங்களைத் தமக்கெனக் கொள்ளக் கருதார்கள். சோரனாற் கவர்ந்துகொள்ளப்படினும், முடியணி அரசனுக்கே உரியதாகலின் அதனை எவனும் தரிக்கக் கருதான்; கருதுமாயின், அவன் அரசனா லொறுக்கப்படுதல் ஒருதலையாதல்போல, அவனும் சிவபிரானால் ஒறுக்கப்படுதல் ஒருதலையாதலினால் என்க. அங்ஙனமாயின் அத் தேவர்கள் தமக்குச்செய்யும் வணக்கத்தைத் தமக்காகச் சுவீகரித்துக்கொள்ளுமாறு எங்ஙனம் எனின், அவ் வணக்கத்தைச் சிவனுக்கு அர்ப்பணஞ் செய்தலே சுவீகரித்துக்கொள்ளுமாறென்க.

உடம்பை உயிர் அதிட்டித்து நிற்றல்போல எல்லாப்பொருள்களையுஞ் சிவபெருமான் அதிட்டித்து நிற்றலின், அவ் வியைபு பற்றியே அதிட்டிக்கப்படும் பொருள்கள்மாட்டும் சிவபிரானுக்கு வணக்கங் கூறப்பட்டதாம் என்க. இக் கருத்துப்பற்றியே ஸ்ரீருத்திரத்தில் செடி முதலியவற்றுக்கு வணக்கங் கூறியதும், சிவபக்தியுரிமை குறித்துச் சிவனடியார் வணங்கப்படுவதும் என்க. இன்னும் வைஷ்ணவரேனும் ஏகான்மவாதிகளேனும் முறையே சிவனை விஷ்ணுவுக்குத் தாழ்த்தியேனும், விஷ்ணுவையுஞ் சிவனையுஞ் சமப்படுத்தியேனுங் கூறுமிடங்களினெல்லாம், அக் கூற்றுகள் ஆன்மதத்துவத்தைப்பற்றி நின்றனவேயன்றி முப்பத்தாறுந் தத்துவத்தி



னராகிய சிவபெருமானைச் சிறிதும் பற்றுதலின்றாம் என்று அறிவாளிகள் ஓர்ந்துகொள்வர். இங்ஙனமாயின், "ஊற்றிருந்த நறவொழுகுந் துளவத்தாரோ யுனையிகழ்ந்தோ ரெமையிகழ்ந்தோர்" எனக் காசிகாண்டம் விண்டுவை யுயர்த்திக் கூறியவா றென்னையெனின், திருமால் சிவனடியாருட் சிறந்தவராதலினால் அவரை யிகழ்ந்தோர் சிவனை யிகழ்ந்தோர் எனக் கூறியதல்லது, அம் முதல்வனுக்கு ஒப்பென்றும் மிக்காரென்றும் கூறியதல்ல என்க. விண்டுவை யிகழ்ந்தோர் படுந்துயரை "பாம்பணைப் பள்ளியானைப் பழிமொழி பகர்ந்த பாவி, கூம்பியா யுதர வங்கி கூர்ந்திடக் குலையு மன்றே" எனக் கூறலான றிக.

விட்டுணுவையும் பிரமாவையும் வேறு பலரையும் புகழுகின்ற வேதமானது பரமசிவனைத் துதித்ததுபோல, விட்டுணு முதலியோருக்கு ஓர் உரையாயினும் கூறியதில்லை. அவர்களைச் சொல்லியதும் உபசாரமேயென்று இவ் வுலகமெல்லாம் அறியும்படி அவர்களை அவ் வேதம் முன்னும் பின்னும் விலக்கியது.

அதர்வசிகையிலே அந்தத் தியானம் யாது? அன்றியும் தியானிப்போன் யாவன்? தியானிக்கற்பாலரும் யாவர்? என்னும்மூன்று வினாக்களுள் முன் னிரண்டிற்கும் உத்தரம் கூறிப்பின் மூன்றாவதற்குக் கூறிய உத்தரம்:—மிகவுந் தியானிக்கற்பாலராகிய ஈசானரைத் தியானிக்க; அந்தப் பிரம விட்டுணு ருத்திரேந்திரர்களாகிய இவரெல்லாம் உற்பத்தியாகின்றனர். எல்லா இந்திரியங்களும் பூதங்களுடனே கூட உற்பத்தியாகின்றன. காரணமும் காரணங்களைப் படைத்தோரும் கருதினோரு மாகியவர் உற்பத்தியாதல் இல்லை; காரணரும் சருவைசுவரிய சம்பன்னரும் சர்வேசுவரரும் சம்புவுமாகியவரே ஆகாச மத்தியிலே தியானிக்கற்பாலர்" என்பது தொடங்கி "மற்றதெல்லாம் விட்டுச் சுகத்தைச் செய்பவராகிய சிவனொருவரே தியானிக்கற்பாலர். அதர்வசிகை முற்றிற்று" என்பதாம்.

இந்தச் சுருதி சிவனொருவரே தியானிக்கப்படுதற்குரிய பரமபதி எனக் கூறி, மற்றைத்தேவர் தியானிக்கப்படுதற் குரியரல்லர் என்னுங் கருத்தைத் துணிவிக்கும் பொருட்டு, தேவ மனுஷாதி சகல பிரபஞ்சத்தினும் பிரமன் முதலிய நால்வர்க்கும் மிக்க தலைமைகூறி அவர்களுடைய தலைமை அளவுபட்டன என்பது விளங்க அவர்கள் பூதேந்திரியங்கள்போல உற்பத்தியுடையவர் என்று கூறியது. இவ் வுற்பத்தியுடைமையாகிய குற்றம் பரமசிவனிடத்தில் இல்லையென்று காட்டுதற்குக் காரணங்களைத் தமது சங்கற்பத்தாற் படைத்த ஆதி காரணராகிய ஈசானர் உற்பத்தியில்லாதவர் என்று கூறி, ஈசானர் சர்வேசுவரர் சம்பு சிவன் என்னும் நான்கு சொற்களாலும் குறித்த விசேடியப்பொருளை வேறுகொள்ளாதபடி செய்து,

மற்றைத் தேவர்களைத் தியானிக்க வேண்டாமென விலக்கி, அச் சிவனே தியானிக்கப்படுவோர் எனத் தொடக்கத்திற் கூறிய கருத்தையே வலியுறுத்தும்பொருட்டு மீட்டும் கூறி, அப்பால் வேறொன்றுங் கூறாது முடிந்தது.

ஈசானர் முதலிய சொற்கள் யோகரூடியினாற் சிவபெருமானையே யுணர்த்தும். ஆகாச மத்தியிலே என்றது உபாசனா ஸ்தானங் கூறியவாறு. அதற்குப் பரமாகாசமாகிய கைலாசம் என்னும் பெயரையுடைய சிவலோகம் என்பது கருத்து. அதனால், இருதய கமலம் இரவிவிம்பம் முதலிய எவ்வெவ் விடங்களில் சிவனைத் தியானிக்கினும் அவ்வவ் விடங்கள் அனைத்தினும் சோதிமயமாகிய கைலாசத்தைப் பாவித்து, அதன் மத்தியத்தில் இருப்பவராகச் சிவனைத் தியானிக்க என்பது உணர்த்தப்பட்டது. இவ் வுபநிடதப் பொருள் பற்றியே,

காரெழில் புரையு மேனிக் கண்ணனை யென்னைப் பின்னை
யாரையும் புகழும் வேத மரன்றனைத் துதித்த தேபோல்
ஒருரை விளம்பிற் றுண்டோ வுரைத்தது முகம னென்றே
பேருல கறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே.

(உபதேசப்படலம்—உஎ)

எனக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும்,

முளரியோன் முதலாஞ் சுரரெலாம் பூத
முதல்வற் றேடுதித் துள்ளோ
ரளவிடுந் தலைமை யாளரென் றவரை
யகற்றிமால் விடையவ நினையே
வளமுறு மெல்லாத் தலைமையு முடையோன்
வருமுதற் காரண னல்லோ
ருளமுறு தியானப் பொருளெனச் சிகைதேர்ந்
துரைப்பவு மயங்குவர் சிலரே.

(சிவதத்துவ விவேகம் மொழிபெயர்ப்பு.)

எனச் சிவஞான சுவாமிகளும் கூறுவாராயினர் என்க.

இவ்வாற்றால் சிவனே விசுவசேவியர் என்பது உணர்த்தப்பட்டது. சிவதத்துவவிவேகம் கஉ-ம் சுலோகத்திலும், சதுர்வேததாற்பரிய சங்கிரகம் கூகூ-ம் சுலோகத்திலும், அதர்வசிகோபநிடதப் பொருள் ஆராயப்பட்டு சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர் என நன்கு நிறுவப்பட்டிருக்கின்றது.

———

உ

கணபதி துணை.

காஞ்சீபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார்

இயற்றிய

# திருக்கழுக் குன்றச் சிலேடை வெண்பா.

## காப்பு.

வண்டுவனப் பிள்ளையார் துதி.

வெண்பா.

1. திருக்கழுக்குன் றத்துச் சிலேடைவெண்பாக் கூறக்
கருத்தளித்து நாயேனைக் காக்கும்—மருத்துளவார்
விண்டுவனப் பிள்ளையாம் வேதன்முத லோர்போற்றும்
வண்டுவனப் பிள்ளைதான் வந்து.

(குறிப்பு.) மரு துளவு - மணம் பொருந்திய துழாய். விண்டு வனம் பிள்ளையாம் வேதன் - திருமாலும் அழகை உடைய அவர் குமாரராகிய பிரமாவும். வண்டுவனப் பிள்ளையாரென்பது இத்தல விநாயகர் திருநாமம். இப் பெயர் பிரமர விநாயகரென்று வடமொழியில் வழங்கும். வண்டுவனப் பிள்ளை வந்து காக்கும் என்க. (க)

## இருவுமது.

2. சீலமறை யோர்வாழ் திருக்கழுக்குன் றத்துவெண்பா
மாலையொரு நூறு மகிழ்ந்துரைக்க—நாலுவாய்
உள்ளானை யைந்துகர முள்ளானை யன்பரகம்
விள்ளானை நெஞ்சகமே வேண்டு.

(கு - பு.) நாலுவாய் - தொங்குகின்ற வாய். அகம் - மனம். (உ)

## வாழ்த்து.

3. வாழ்கவர னஞ்செழுத்து வாழ்கவரன் வெண்ணீறு
வாழ்ககழுக் குன்றத்து வாழ்வார்கள்—வாழ்கபுவி
வாழ்கமறைச் சைவநெறி வாழ்கவரன் மெய்யடியார்
வாழ்கமுத னால்வர்சொலும் வாக்கு.

(கு - பு.) மறைச் சைவநெறி - வைதிகச் சைவமார்க்கம். முதல் நால்வர் - திருஞானசம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர் நால்வர்.

## நூல்.

1. திங்கடவழ் மாடத் திருப்பாற் கடனேராய்க்
கங்கையணை நேராங் கழுக்குன்றே—மங்கை
உருவாக் களித்தா னுலகெலா மென்னும்
திருவாக் களித்தான் சிலம்பு.

(கு - பு.) மாடம், திருப்பாற் கடலுக்கும் ஆகாய கங்கையின் கரைக்கும் உவமை. கங்கை அணை - கங்கையின் கரை. இங்கே கங்கையென்றது ஆகாய கங்கையை. மங்கை உருவா - உமாதேவியார் தம்முடைய திருமேனியின் ஒரு பக்கத்தில் அமைய. 'உலகெலாம்' என்னும் திருவாக்கைச் சேக்கிழாருக்கு அளித்தான். சிலம்பு - மலை. (௧)

2. அம்பரத்திற் செல்குண்டை யண்மியவேய் கோயில்கொடிக்
கம்ப நிகராங் கழுக்குன்றே—நம்பும்
உருவரு வில்லா ரொருமுப் புரத்தார்
வெருவரு வில்லார் விருப்பு.

(கு - பு.) குண்டை - இடப ராசி. இடப ராசியை நெருங்கிய மூங்கில் திருக்கோயிலிலுள்ள இடபக்கொடியை உடைய துவச ஸ்தம்பத்தை ஒக்கும். உரு அரு இல்லார் - உருவத் திருமேனியும் அருவத் திருமேனியும் இல்லாதவர். வெருவரு வில்லார் - அஞ்சுதற்குக் காரணமான வில்லை உடையவர். (௨)

3. வண்டுமொய்த்த வெண்டா மரையை மதியென்னக்
கண்டுசிகி தாவுங் கழுக்குன்றே—சண்டனைமுன்
தள்ளிமலைக் கத்தன் றனிமலர்த்தாள் வீசினேன்
வெள்ளிமலைக் கத்தன் விருப்பு.

(கு - பு.) மதிக்கு வெண்டாமரையும், வண்டுக்கு அதிலுள்ள களங்கமும் உவமை. சிகி - கேது. சண்டனை - யமனை. மலைக்க - மலைப்படையும்படி. வெள்ளிமலைக்கு அத்தன்; வெள்ளிமலைக் கத்தன் எனப் பிரித்து வெள்ளிமலையின் தலைவன் எனலும் ஆம். (௩)

4. அடியவர்போல் வெண்ணீ றணிந்தக்கம் பூண்டு
கடுவன் பணிகழுக் குன்றே—முடியினின்மண்
வைத்தன் பரையான் மகதேவ னண்டர்தொழும்
அத்தன் பரையா னகம்.



(கு - பு) அக்கம் - உருத்திராக்கமாலையை. கடுவன் - ஆண்குரங்கு. அன்பரை - திருவாதவூரரையும் வந்தியென்னும் பிட்டுவாணிச்சியையும். பரையான் - உமாதேவியை உடையவன். (௪)

5. கொன்றை மரத்தைக் கொடிபடர்ந்து சுற்றமறிக்
கன்றுடையான் போலாங் கழுக்குன்றே—துன்றுதிரு
நாவண் கரத்த னலவரவக் கங்கணஞ்சேர்
பூவண் கரத்தன் பொருப்பு.

(கு - பு.) மறிக்கன்று - மான்கன்று. கொன்றை சிவபிரானுக்கும், அதிற் படர்ந்த கொடி அம்பிகைக்கும் உவமை. திரு நா அண் கரத்தன் - திரு நாவை அண்ணிய விடத்தை உடையவன்; கரம் - விடம். வண்கரத்தன் - வண்மையையுடைய திருக் கரத்தை உடையவன். (௫)

6. விண்ணோர் மதிமணஞ்செய் வேடர்பந்த ரிற்கட்டும்
கண்ணாடி போலாங் கழுக்குன்றே—நண்ணார்
செருக்கடவூ ரத்தத் திகிரி விடையோன்
திருக்கடவூ ரத்தன் சிலம்பு.

(கு - பு.) மதிக்குக் கண்ணாடி உவமை. நண்ணார் - பகைவருடைய. செருக்கு அட - வீரமிகுதியை அடுதற்கு. ஊர் விடையோன் - அடுதற்கு ஊர்ந்த விடையோன்; விடை - இடபம். அத்தத் திகிரி விடையென்றது திருமாலாகிய இடபத்தை; அத்தம் - கை; திகிரி - சக்கரம். திருக்கடவூர் - ஒரு தலம். (௬)

7. சந்தமிகுங் காந்தளிடைச் சார்மதிய மாதர்கள்கைக்
கந்துக மேய்க்குங் கழுக்குன்றே—இந்து
சிகரத்து வைத்தான் செயிர்த்தரக்கன் றோள்கள்
தகரத்து வைத்தான் றலம்.

(கு - பு.) சந்தம் - அழகு. கந்துகம் ஏய்க்கும் - பந்தை ஒக்கும். காந்தளுக்கு மாதரின் கையும், மதிக்குப் பந்தும் உவமை. இந்து - சந்திரனை. சிகரத்து - முடியில். செயிர்த்து - கோபித்து. அரக்கன் - இராவணனுடைய. தகரும்படி துவைத்தவன். (௭)

8. பிள்ளைமதி யைக்குரவர் பேரெனக் கோடென்று
கள்ளமுட னெட்டுங் கழுக்குன்றே—கொள்ளும்
அலையாலங் காட்டினா னாருங் களத்துத்
தலையாலங் காட்டினான் சார்வு.

(கு - பு.) பிள்ளைமதியை - பிறையை. ஏனக் கோடு - பன்றியின் கொம்பு. அலை - பாற்கடலில் தோன்றிய; அலை : ஆகுபெயர். களத்து ஆலத்தைக் காட்டியவர்; களத்து - கழுத்தில்; ஆலம் - விடம். தலையாலங் காடு - ஒரு திருப்பதி. (அ)

9. குன்மம் படுகாசங் குட்ட முதலாய
கன்மவினை நீக்குங் கழுக்குன்றே—வன்மனத்தார்
காண்கைக் கரியான் கருதுமிரண் டாயிரங்கோட்
டேண்கைக் கரியா னிடம்.

(கு - பு.) காசம் - ஒருவகை நோய். குட்டம் - குஷ்டநோய். காண் கைக்கு - காண்பதற்கு. ஏண் - வலிமையை உடைய. கைக் கரி - யானை; இரண்டாயிரம் கொம்புகளையுடைய யானையென்றது ஐராவணத்தை; "நிரை நிரை, ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின், வெண்ணிறச் செங்கண் வேழம்" கோயினான்மணிமாலை, 4. (கூ)

10. வாய்ந்தகழை முத்த மதிக்கதிர்வீ சச்சந்த்ர
காந்தநீ ரூறுங் கழுக்குன்றே—சேர்ந்தமலர்த்
தாளா னனந்தந் தவழ்கடலி னஞ்சருந்தி
மாளா னனந்தன் வரை.

(கு - பு.) கழை - மூங்கிலின். முத்தம் மதிக்கதிரை வீச. அநந்தம் தவழ் - அழகிய சங்கங்கள் தவழும். அநந்தன் - முடிவில்லாதவன். (க0)

11. மாணிக்கப் பாறையுறு மாதர்கம லாசனிபோல்
காணத் திகழுங் கழுக்குன்றே—பூணும்வினை
விஞ்சாக் கையினான் மெலியாது வந்தாளும்
தஞ்சாக் கையினான் றலம்.

(கு - பு.) கமலாசனி - திருமகள். மாணிக்கப் பாறைக்குச் செந்தாமரை மலர் உவமை. வினைவிஞ்சுகின்ற ஆக்கையில் நான் மெலியாமல். தஞ்சாக்கை - வைப்புத்தலங்களுள் ஒன்று; "பழனம் பாம்பணி பாம்புரந் தஞ்சைதஞ் சாக்கையே" சுந்தா. தேவாரம். (கக)

12. விண்டொடர்மே டம்வருடை வேங்கை யருகிருத்தல்
கண்டுபய நீங்குங் கழுக்குன்றே—தொண்டர்வினைக்
கோடத்து வந்தான் குறைத்தா னொருவேடு
வேடத்து வந்தான் விருப்பு.



(கு - பு.) வேங்கைப்புலியின் அருகில் வரையாடு அச்சமின்றி யிருத்தலை மேடராசி கண்டு பயம் நீங்கும். வருடை - வரையாடு; தம்முள் பகைமை உள்ள விலங்குகளும் இத்தலத்தில் பகைமை யின்றி வாழ்கின்றன என்பது கருத்து. வினைக்கோள் தத்துவம் - வினையாற் கொள்ளப் படும் தத்துவங்களை. அருச்சுனன் தவத்தைச் சோதித்தற்கு வேட்டுவ வேடத்தோடு வந்தான்; வேடு வேடம் - வேட்டுவ வடிவம். (கஉ)

13. மாந்தளிர்க்கை யேந்திவன மான்றேனிற் றோய்க்கமதி
காந்திமிகுத் தோங்குங் கழுக்குன்றே— சாந்தம்
தகவருந்த வந்தான் றழைத்தசிறுத் தொண்டர்
மகவருந்த வந்தான் மனை.

(கு - பு.) மாந்தளிர்க்கை - மாந்தளிராகிய கையில். வனமான் - வனமாகிய பெண்; எழுவாய். தேனில் தோய்க்கப்பெற்றதனால் மதி ஒளி மிகுத்து ஓங்கும்; காந்தி - ஒளி. சாந்தமும் தகவும் அருந்தவமும் தழைத்த; தான்: அசைநிலை. மகவை அருந்துதற்கு. (கந)

14. சேல்வெகுண்டு பாயவரைத் தேனிறால் கீண்டுபுனற்
கால்வழிய வோடுங் கழுக்குன்றே—மால்கெட்டுத்
தான்னும் பரியான் சுகமுறவே யாள்வன்மறை
என்னும் பரியா னிடம்.

(கு - பு.) இறால் - தேனடை. கால் - கால்வாய். தேன் ஓடும் எனக் கூட்டுக. மால் - மயக்கம். தான் உம்பர் யான் சுகமுற; உம்பர் - தேவலோகத்திற் சென்று. மறைப்பரி - வேதக்குதிரை. (கச)

15. அண்டர்தொழுங் காழியர்கோ னப்பர்திரு வன்றொண்டர்
கண்டுதமிழ் பாடுங் கழுக்குன்றே—தொண்டருக்குப்
பஞ்ச முகத்தான் படிக்கா சருளினான்
பஞ்ச முகத்தான் பதி.

(கு - பு.) காழியர்கோன் - சம்பந்தர். இம் மூவரும் கழுக்குன்று சிவலிங்க வடிவமாகத் தோற்றினமையின், மேல் ஏறுமல் கீழே அக்கினி மூலையில் நின்று பாடினார்கள். அங்ஙனம் நின்று பாடிய இடம் மூவர்பேட்டை என்னும் பெயரால் இக்காலத்து வழங்கப்படுகின்றது. அங்கே மூவர் கோயில் உண்டு; அஃது அப் பெயராலே இன்றும் வழங்கப்படுகின்றது. மலை சிவபெருமான் வடிவமென்பதைப் புலப்படுத்த மலையின் சுற்றுப்பக்கத்தில் கீழே மலையை நோக்கியவண்ணமாகத் திருநந்தி தேவர்களின் வடிவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. தொண்டருக்கு - திருஞானசம்பந்தருக்

கும் அப்பருக்கும். பஞ்சம் உகும்படி படிக்காசு அருளியது திருவீழிமிழலையில்; அரிசிற்கரைப்புத்தூரிற் புகழ்த்துணை நாயனாருக்குப் படிக்காசு அருளியதும் ஈண்டறிதற்பாலது; "அகத்தடிமை செய்யு மந்தணன்றா னரிசிற் புனல் கொண்டுவந் தாட்டுகின்றான், மிகத்தளர் வெய்திக் குடத்தையு நும்முடி மேல்விழுத்திட்டு நடுங்குதலும், வகுத்தவனுக்கு நித்தற்படியும் வருமென் றொரு காசினை நின்ற நன்றிப், புகழ்த்துணை கைப்புகச் செய்துகந்தீர் பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே" (சுந்தர. தே.) பஞ்சமுகத்தான் - சத்தியோசாதம் முதலிய ஐந்து திருமுகங்களை உடையவன். (கரு)

16. ஏந்திழையார் தங்கரத்தி லேய்வதுபோற் பைங்கிள்ளை
காந்தளிடை மேவுங் கழுக்குன்றே—பாந்தணாண்
பூட்டியவில் லத்தர் பொழிலேழோ டேழீன்று
காட்டிய வில்லத்தர் காப்பு.

(கு - பு.) காந்தள் ஏந்திழையார் கைக்கு உவமை. பெண்கள் கையில் கிளியைத் தாங்கி யிருத்தல் மரபு. பாந்தள் நாண் - வாசுகி என்னும் பாம்பாகிய நாணை. அத்தர் - கையை உடையவர். பொழில் - உலகங்கள். இல்லத்தர் - மனைவியாகிய உமாதேவியை யுடையார்; இல்லம் - மனைவி; வில்லத்தர் எனக்கொண்டு வில்வத்தை யுடையவர் எனலுமாம். (கசு)

17. மாதர்நடங் கண்டு மயின்மறைய நாகங்கள்
காதலுட னாடுங் கழுக்குன்றே—ஓதும்
கலிக்கம் பனகத்தர் காணு மடியார்
கலிக்கம் பனகத்தர் காப்பு.

(கு - பு.) நடம் - நடனத்தை. மயில் மறைய - நாணத்தால் மயில் மறைந்துவிட. காதலுடன் ஆடும்: மயில் நீங்கினமையால் பாம்புகள் காதலுடன் ஆடின. கலிக்கம்பன் அகத்தர் - கலிக்கம்ப நாயனாரது மனத்தில் உள்ளார். அடியார்களுடைய கலிக்கு அம்பு அன்ன கத்தர்; கலிக்கு - வறுமையாகிய பகையை வெல்லுதற்கு. கத்தர் - கர்த்தர்; தலைவர். (கஎ)

18. இமிர்செம் மணிகதிர்போ லெங்குமொளி வீசக்
கமல மலருங் கழுக்குன்றே—தமர
மறைக்கு மருக னலனிமய மால்வெற்
பிறைக்கு மருக னிடம்.

(கு - பு) இமிர் - தழைத்த. செம்மணி - மாணிக்கம்; எழுவாய். கதிர்போல் - சூரியனைப்போல். தமரம் - முழக்கத்தை உடைய. மறைக்கும்



அருகன் அலன் - வேதங்களுக்கும் எட்டாதவன்; அருகு - சமீபம். உம்மை: உயர்வு சிறப்பு. மால் - பெரிய. இமயமாகிய வெற்பிறைக்கு மருகன். (கஅ)

19. மதிதவழு மாட மரகதத்தி னாற்செங்
கதிர்பச்சை யாகுங் கழுக்குன்றே—வதியும்
மதியரவம் பாற்றினான் வாழ்த்தி வணங்கு
மதியரவம் பாற்றினான் வாழ்வு.

(கு - பு.) மாடத்தில் அழுத்திய மரகதமணியினாலே. செங்கதிர் - சூரியன். மதி அரவு அம்பு ஆற்றினான் - சந்திரனையும் பாம்பையும் நீரையுடைய ஆகாச கங்கையையும் உடையான். வாழ்த்தி வணங்கும் மதியை (புத்தியை) உடையவரது அவத்தினை நீக்கியவன்; அவம் - பொல்லாங்கு. (கக)

20. தொண்டின்மிகு வாதவூர்த் தோன்றல் குருவடிவம்
கண்டு களிக்குங் கழுக்குன்றே—விண்டுமுனம்
வேகத்தா னுகைத்தான் மேவியுகைத் தானுமையாள்
பாகத்தா னகத்தான் பற்று.

(கு - பு.) வாதவூர்த் தோன்றல் - மாணிக்கவாசகர். திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையிற் குருந்தமரத்தடியில் கண்ட குரு வடிவத்தை இத் தலத்திற் கண்டு களித்தமை, "கலங்கி னேன்கலங் காம லேவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே" (திருவா.), "கழுக்குன்றத் தரிபிரமர் காணானைக் கண்டானைக் கருத்துள் வைப்பாம்" (திருக்கழுக்குன்றப்.), "வழுக்கில் பெருந் துறையில் வாழ்வித்த கோலம், கழுக்குன்றிற் கண்ட கவி" (ஏகாம்பரநாதருலா) என்பவற்றால் விளங்கும்; இதற்கு அறிகுறியாக, திருமலையின்மேல் ஏறும் வழி தொடங்கும் இடத்தில் மேல்புறத்தில் ஒரு மண்டபமும், அதில் சிவபெருமான் திருவடி நிலைகளும் மாணிக்கவாசகர் திருவுருவமும் இருக்கின்றன. விண்டு - திருமால். வேகத்து ஆன் ஆக; விண்டு ஆன் ஆக. ஆன் - இடபம். உகைத்தான் - செலுத்தினவர். நாகத்தான் - பாம்புகளை ஆபரணமாக உடையவர். (உ0)

21. குலவுமந்த ரத்துவருங் கோளரவைக் கண்டு
கலவமயி லாவுங் கழுக்குன்றே—குலவரியாம்
மோட்டாமை யோட்டினான் மூளுநமன் கையிலெனைக்
காட்டாமை யோட்டினான் காப்பு.

(கு - பு.) அந்தரத்து - ஆகாயத்தில். கோளரவை - இராகுகேதுக்களாகிய பாம்புகளை. கலவமயில் - கலாபத்தை உடைய மயில்கள். அரியாம்

மோட்டு ஆமை ஓட்டினன்; அரி - திருமால். மோடு - பெருமை. ஆமை ஓடு - ஆமையின் முதுகோடு. நமன் - யமனுடைய. காட்டாமை - காட்டிக்கொடாமல். ஓட்டினன் - என்னை நல்வழியிற் செலுத்தினவன். (உக)

22. வானதிமே லும்பர் மடவனங்கு றத்தியர்தம்
கானடைகண் டேங்குங் கழுக்குன்றே—ஞானமே
ஆன்றதிருக் கண்ணார்த மற்பகத்தார் செவ்வனலைக்
கான்றதிருக் கண்ணார்தங் காப்பு.

(கு - பு.) வான் நதி - ஆகாய கங்கையில். உம்பர் மட அனம் மேலே உள்ள இளமையான அன்னங்கள். கால் நடை கண்டு ஏங்கும். ஆன்ற - அமைந்த. திருக்கு அண்ணார் தம் அற்பு அகத்தார்; திருக்கு - மாறுபாடு. அற்பு - அன்பு. திருக்கண்ணார் என்பன ஒருசொன் னீர்மையன. அனலை கான்ற திரு கண்ணார்; கண் - நெற்றிக் கண். (உஉ)

23. தாமரையம் பார்கார் முகவேழந் தால்வனத்தார்
காம னிகராங் கழுக்குன்றே—மாமன்றீ
யாகம வித்தா னியம்புமிரு பக்கெட்டாம்
ஆகம வித்தா னகம்.

(கு - பு.) முதல் இரண்டு அடிகள் மலைக்கும் மன்மதனுக்கும் சிலேடை. தாமரை அம்பு - தாமரை மலர்களோடு கூடிய நீர்; தாமரைப் பூவாகிய பாணம். கார்முக வேழம் - கரிய முகத்தை உடைய யானை; வில்லாகிய கரும்பு; வேழம் - கரும்பு. வனம் - காடு; அழகு. காமன் நிகர் ஆம் - மன்மதனை ஒக்கும். மாமன் - தக்கனுடைய. தீ யாகம் - தீயை உடைய யாகம்; தீச்செயலை யுடைய யாகம். ஆகம வித்தான் - ஆகமங்களுக்கு மூல காரணன். (உங)

24. ஆம்பன்முகி லூர்ந்துசசி யார்ந்தபல கண்மருவிக்
காம்பிந் திரனுங் கழுக்குன்றே—ஆம்புகழ்சேர்
ஆலவா யுள்ளா னகத்தன்பி லாரையருள்
ஆலவா யுள்ளா னகம்.

(கு - பு.) மூங்கிலுக்கும் இந்திரனுக்கும் சிலேடை. ஆம் பல்முகில் ஊர்ந்து - பலவாகிய மேகங்கள் ஏறப்பெற்று; யானையையும் மேகத்தையும் ஏறி; ஆம்பல் - யானை. சசி - சந்திரன், இந்திராணி. கண் - கணுக்கள்; விழிகள். காம்பு - மூங்கில். ஆம் - மேன்மேலும் விருத்தியாகின்ற. ஆலவாயில் உள்ளவன்; ஆலவாய் - மதுரை. அவாய் உள்ளான் - விரும்பி நினையாதவன். (உ௪)



# செய்தித் திரட்டு.

**திருக்காறயில்:**—கைலாசநாயகி சமேத கண்ணாயிரநாத சுவாமி, குக்குட நடன ஆதிவிடங்கத் தியாகராஜ சுவாமி, ஸ்ரீமுக சம்வர்ச்சர பிரம்மோத்ஸவம், ஷை திருக்கோயிற் றிருப்பணிச் செல்வர் பரம்பரையினரும், தர்மகர்த்தர்களுமான தேவகோட்டைத் திருவாளர்கள் மூத்த. கரு. அரு. பழ. அருணசலம் செட்டியார், மூத்த. கரு. அரு. கரு. அருணசலம் செட்டியார் ஆகியவர்களால், வைகாசி சுஉ தொடங்கி உஎஉ வரை இனிது நிறைவேறியது.

**எட்டப்பன் பிரதமவித்தியாலயம்:**—எட்டயபுரம் சமஸ்தானம் உசிலன் குளக் கிராமத்தில், மதுரை மகாராஜஸ்ரீ ச. சோமசுந்தர பாரதியார் அட்வகேட் அவர்கள் கட்டிடத்தில், இவ் வித்தியாலயம், ஷை சமஸ்தானம் கனம் ஸ்ரீ குமாரராஜா அவர்களாதரவில் சித்திரை ௯கஉ தேசபக்தரும் வழக்கறிஞருமான தூத்துக்குடி திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களும் பிற பெரியார்களும் வந்திருந்து வாழ்த்துக் கூற, பிரசங்கம் முதலிய பிற பல வைபவங்களுடன் தொடங்கப்பெற்றது.

**மணிவாசக ஞானசம்பந்த சபை:**—மதுரை மூதூரில், மீனாக்ஷிசுந்தரர் திருக்கல்யாணத் திருவிழாவும், அழகர் திருவிழாவும் சிறப்பாக நிறைவேறியதருணமான சித்திரை உ௫, உசு, உஎஉகளில் இச்சபை நடந்தேறியது. திருவாளர்களான.—வித்துவான் மு. கோவிந்தசாமி ஐயர், திருநெல்வேலி சண்முக சுவாமியார், உள்ளூர்க் கல்யாணசுந்தரப் பட்டர், காரைக்குடி சேவு. மெய்யப்ப செட்டியார், கண்டனூர் இராமநாதன் செட்டியார், உள்ளூர் ஆர். கணபதிஐயர் அட்வகேட், மதுரம் சுந்தரபாண்டிய ஓதுவார், காரியதரிசி பா. சிதம்பரநாதபிள்ளை ஆகியவர்கள் பிரசங்கம் புரிந்தனர். தேவாராதி திருப்பாசுரங்கள் ஓதப்பெற்றன. காரியதரிசி ஒவ்வொரு பிரசங்கிகளையும் பிரசங்கங்களையும் விளக்கிக் கூறினர். உள்ளூரார் வெளியூரார் பொருளுதவி யாதரித்தனர். யாவர்க்கும் இறைவர் திருவருள் புரிவாராக!

**கண்டியூர்:**—இராமலிங்க அடிகள் திருவருட் கழகம், ஆலங்குடி திருவாளர் த. ச. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் தலைமையில், சித்திரை உஎஉ நடைபெற்றது. முற்பகல் பிற்பகல்களில், திருவாளர்களான.—அம்மாப்பேட்டை த. சி. ஜம்புநாதையர், தொழுவூர் இராமலிங்க அடிகள் அடிகள் அடிமை நாகலிங்க வாண்டையார் இருவர் இன்னியங்களுடன் அருட்பாசுரங்களும், கழகப்புலவர் ஐயாறுபிள்ளை—ஆண்டான் கோவிற் சுப்பிரமணியன் இருவர் கம்பர்கவிநயம்—பாரி என்பனவும், ஐயாறுபிள்ளை—த. சி. ஜம்புநாதையர்—மேலைப்பாலையூர் கோபாலையர்—அவைத்தலைவர் ஆகிய நால்வர் திலகவதியார் சீர்மை—இராமலிங்க அடிகள் திருவவதாரமும் ஜீவகாருணிய விளக்கமும்—எறிபத்த நாயனார்—சைவவுளவு என்பனவும் மேற்கொண்டு இயம்ப, தலைவர் முடிப்புரையுடன் ஆராதனை அடியவர் பூசைகளும், முத்துவிமானத்தில் இராமலிங்க அடிகள் திருவுலாவும், திருவருட்பா பாராயணமும் சிறப்பாக நிறைவேறின.

**ஆத்தங்குடி:**—ஸநாதன தர்ம மகாசபை சித்திரை கஉவ மறைத்திரு: கல்யாணசுந்தர கனபாடிகள் தலைமையில் நடைபெற்றது. ஸநாதன தர்மிகளான க. சாமிநாதையர்—மணவாளையங்கார்—இராமசுப்பிரமணிய சாஸ்திரியார்—இராமபத்திராசாரியார்—வேங்கடராமசர்மா—சு. வீர. கதிரேசச் செட்டியார்—வி. வேங்கடேசர்—மு. திருவேங்கடையங்கார் ஆகியவர்கள், ஸநாதந தர்மங்களைப்பற்றிப்பேச, இச்சபையைச் சென்னை இந்து மத்தியகமிட்டியின் கிளையாக்கத் தீர்மானம் நிறைவேறியது.

நாவுக்கரசு நற்சபையின் ஆறுவது ஆண்டுவிழா, வைகாசி யகூவ ஊழியன் ஆசிரியர் திரு. ராய. சொக்கலிங்கன் அவர்கள் தலைமையில் இரு பெண்கள் பிரசங்கிக்கக் கொண்டாடப்பெற்றது.

**கும்பாபிஷேகம்:** சிவாலய ராஜகோபுரமும், வெளிப் பிள்ளையார், தண்டாயுதபாணி திருக்கோயில்களும் திருப்பணிநிறைவேறி, வைகாசி உகூவ மகாகும்பாபிஷேகம் தனவணிகநகரத்தார்களால் இனிது நிறைவேறியது. அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாப் போந்தருளினர். சனாதனதர்மப் பிரசாரமும் எதிர்ப்பிரசாரமும் நிகழ்ந்தன.

**மஞ்சுவிரட்டு:** அந்தரநாச்சிக்குப் பிரீதியாக வழக்கம்போல், வைகாசி உசவ நடைபெற்றது.

**ஆ. முத்துப்பட்டணம்:**—லோகநாயகி அம்மனுக்கு வைகாசி உசவ தேர்த்திருவிழாவும், உருவ சப்தாவரணமும் நடைபெற்றன. சப்தாவரணத்தன்று, லோகநாயகி வித்தியாசாலையின் நான்காவது ஆண்டுவிழா, கண்ணப்பர்பத்மாவதியின் சொற்பொழிவுடன் நடைபெற்றது.

**ஆவினிப்பட்டி:**—விவேகானந்தர் கல்விக்கழக ஆறும் ஆண்டுநிறைவுவிழா, 3—6—1933ல் காரைக்குடி நகரசபை உபதலைவர் திருவாளர் மு. ராம. பெரியணன் செட்டியார் தலைமை வகிக்க நடைபெற்றது. தலைவர்க்கு மாலைசூட்டி வரவேற்று ஊர்வலமாக ஆலயவழிபாடுசெய்து கழகஞ்சார்ந்து மாணவர் கடவுள் வாழ்த்துக்கூற, ஆசிரியர் திரு. வ. மு. இரத்திநேஸ்வரையர் பிரரேபிக்க, தலைவர் ஆசனத்தமர்ந்தனர். திரு. அ. பழநியப்ப செட்டியார் வரவேற்புத்தாள்படித்து வழங்கினர். கண்டவராயன்பட்டி திரு. முரு. சொக்கலிங்கம் செட்டியார் அறிக்கை படித்தனர். மாணவர்கட்குப் புத்தகப் பரிசு வெண்பொன் மெடல்கள் வழங்கி, தலைவர் முன்னுரையாகக் கல்வியின் பெருமை—அவசியம்—கழக அமைப்பும் பிறவும் சுருக்கி விளக்கிக் கூறினர். மாணவர்கள் இனிய சொற்பொழிவாற்றினர். வலம்புரி அலர்மேலு கல்லூரி ஆசிரியர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் ‘சிலப்பதிகாரத்து வழக்குரைத்த காதையை’ யும், காரைக்குடி திரு. ஆவி. லெ. அருணசலம் செட்டியார் ‘வீரவாழ்க்கை’ யையும், கொ. இலக்குமிபுரம் திரு. அ. இராமநுஜாசாரியர் ‘பெற்றோர் கடமையையும்’ விரித்துரைத்தனர். கோநகர் திரு. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியாரும், திரு. இராமநாத பிள்ளையவர்களும் வாழ்த்துக்கவி வழங்கினர். கோநகர் திரு. ம. க. சரவணப்பெருமாள் ஓதுவார், மாணவர் சிலருடன் வந்து திருப்பாசுரங்கள் ஓதி மகிழ்வித்தனர்.



**கோநகர்:**—ஞானசம்பந்த நற்சபையின் இருபத்தொராம்ஆண்டுநிறைவுவிழா, வைகாசி எவ மகிபாலப்பதி பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பெற்றது. தலைவரவர்களை வரவேற்று ஆசனத்தமர்த்தி, கற்பகவிநாயக கலாசாலை மாணவர் இன்னிசையுடன் கடவுள்வாழ்த்துக் கூற, திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து வழங்கினர். மாணவிகள் வாழ்த்துக் கூற, தலைமையாசிரியர் திரு. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள் அறிக்கைபடிக்க, தலைவர் முகவுரைகூறி மாணவர்கட்குப் பரிசு வழங்கினர். ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக்கழக ஆசிரியர் திரு. வ. மு. இரத்திநேசுவரையர்—மொழியின் முன்னேற்றம், நெற்குப்பைத் தமிழ்ப்பண்டிதர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்—காரைக்காலம்மையார், பலவான்குடி சிவநேசன் இராமசாமி செட்டியார்—வரகுணதேவரின் பெரியஅன்பு என்னும் விரிவுரைகளை நிகழ்த்தினர். மாணவ மாணவிகளின் கட்டுரை—சம்பாஷணை—பேச்சு—நடிப்புகளும் நிகழ்ந்தன. தலைவர் அழகாக முடிப்புரை கூறினர். இருமாணவர்களின் பின்பாட்டுகளுடனும் பக்கவாத்தியங்களுடனும், காவேரி ஜயலட்சுமி என்னும் திருவளர் செல்வி இருவரால் நந்தனார் சரித்திர கதா காலக்ஷேபம் இனிது நடைபெற்றது. கலாசாலைக் கட்டிடம் நிறைய அன்பர்கள் குழுமியிருந்தனர். கதைநடத்திய சிறுமிகளின் திறமையைச் சிவநேசன் இராமசாமி செட்டியாரும் பண்டிதமணியவர்களும் பாராட்டிப் பேசினர். தேவாராதித் திருப்பாசுரங்கள் ஓதி, வந்தன வாழ்த்துடன் சிறப்பாக நிறைவேறியது. மேலைச்சிவபுரி கணேச செந்தமிழ்க்கலாசாலைப் பேராசிரியர் திரு. மு. அருணசலம் பிள்ளையவர்கள் வாழ்த்துப்பா தந்து மகிழ்வூட்டினர்.

கொப்புடையம்மனுக்கு களவ தேர்த்திருவிழாவும், கஅவ சப்தாவரணம் புஷ்பரதக்காக்ஷியும் நடைபெற்றன. கற்பகவிநாயக கலாசாலையில் வைகாசி உளவ திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசையும், முத்துப்பந்தர் முத்துச்சிவிகையாதிய வைபவங்களுடன் தேவாராதி திருப்பாசுரங்களைப் பண்ணமைதியுடன் மாணவர்கள் பாடியும், அன்பர் குழாங்கள் புடைசூழ்ந்தும் வரத் திருவுலாவும் சிறப்பாக நிறைவேறின. ஆனிமீ கசவ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும் திருவுலாவும் நடைபெறும்.

மெ. க. வகையாரின் புதூருணிப் பிள்ளையார்கோவில் கும்பாபிஷேகம், வைகாசி கூயவ மாண்புடன் நடைபெற்றது.

**பனையப்பட்டி:**—முருகவேள் திருவவதாரத் திருநாளாகிய வைகாசி விசாகம், திருவாளர் மு. ராம. மு. இராமன் செட்டியாரால் இரண்டாயிரம் சாதுக்களுக்கு அன்னவஸ்திரம் அளித்து, வெள்ளி மயில்வாகனத்தில் முருகப்பெருமான் திருவுலா வரச் செய்து, திருப்புகழ்க் கோஷ்டி நடாத்தி இனிது கொண்டாடப் பெற்றது. மதுரை உயர்திரு யோகானந்த சுவாமிமுதலான சாதுக்கள் வந்திருந்தனர். திரு. பொன்னம்பல சுவாமிகளால் சாதுசங்கமகிமைப் பிரசங்கமும், சிவயோகி நடராஜரால் நடனமும் செய்யப்பெற்றன.

**இலுப்பைக்குடி:**—தனவணிக நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்ருக விளங்கும் இவ்வூர்ச் சிவாலயத்தில்,வழக்கம்போல் சித்திரைத் திருநாள், சித்திரை ௧௭௳ தொடங்கி ௨௭௳வரை சீருஞ்சிறப்புமாகஇனிது நிறைவேறியது.

**பெண்கள் கடமை:**—ஜெர்மன் தேசத்து சர்வாதிகாரியும் முதன் மந்திரியுமான ஹிட்லர் சொல்லுகிருர்: ஸ்திரீகள் இருக்கவேண்டியது வீட்டிலேயே என்பதுதான் ஜெர்மனியில் துவங்கியிருக்கும் நாஜி இயக்க ஸ்லோகம். இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்பதுதான் ஹிட்லர் செய்யும் உபதேசம். தொழிற்சாலைகளிலும் உத்தியோக நிலையங்களிலும் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தைஅரிவை, தெரிவை என்னும் அறுவகைப் பெண்களும் ஆண்களுடன் போட்டிபோட்டு வேலை செய்வது ஹெர் வான் ஹிட்லருக்குப் பிடித்தமில்லை. டாக்டர் கோபெல்ஸ் என்னும் புதிய பிரசார மந்திரி இதைத் தெளிவாக உரைத்து விட்டார். ஸ்திரீயின் ஸ்தானம் குடும்பத்தில்தான் என்றும், அவளுடைய கடமை தனது தேசத்திற்கும் ஜனங்களுக்கும் நல்ல பிள்ளைகளைப் பெற்றுக் கொடுப்பதே யென்றும் அவர் கூறினுர். ஸ்திரீ தன்னுடைய உண்மையான தர்மத்தையும் கடமைகளையும் மறுபடியும் செய்யக்கூடிய நிலைமைக்கு அவளைக்கொண்டு வந்துவைத்துச் சமூகத்தைத் திருத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை யென்றும் அவர்சொன்னுர். ஸ்திரீ விடுதலை யென்பது நாட்டுக்குக் கேடு தான். மனிதன்செய்ய வேண்டியதை மனிதனே செய்யும்படி விட்டு அவள் சும்மா விருந்து தன்வேலையைப் பார்க்க வேண்டும் என்ருர். பெண்கட்குச் சமவுரிமை பேசும் சீர்திருத்தமகாஜனங்கள் இதைக் கவனிப்பார்களாக!

**கஷ்டத்தில் கடவுள்நினைவு:**—அமெரிக்காவில் செல்வம் கொழித்துக் கொண்டிருந்த நாட்களில் கோயில்களெல்லாம் பாழாகக் கிடந்தனவாம். இப்பொழுது அங்கே பணக் கஷ்டமும் வியாபார மந்தமும் அதிகமா யிருப்பதால் கோயிலுக்குச்செல்வோர் தொகை வரவரப் பெருகி வருகிறதாம். சாகும் பொழுது சங்கரா! சங்கரா!!

**ஸநாதனதுரோகி:**—தனியாட்சிபுரியும் ஆங்கில அரசாங்கத்தார் ஸநாதன தர்மத்தில் தலையிட்டாவது, ஸநாதன தர்மங்களுக்கு விரோதம் பாராட்டியாவது, ஸநாதன தர்மிகளைக் கொடுமைபுரிந்தாவது எக்காலத்திலும் எவ்வகையானும், ஸநாதன தர்மத்துக்குத் துரோகம் புரிந்திலர். தற்காலம் ஜனநாயக ஆட்சிபெறுதற்குத் தலைவரெனக் கிளம்பிய திரு. காந்தியார், பௌத்த மார்க்காநுசாரியாய் இருந்து, கைம்மைமணம், கலப்புமணம், காதல்மணம் ஆதிய புரியத்தூண்டியும், சாதிசமய ஆசாரங்களைத் தழுவி அவற்றின் விதிமுறை யொழுகுபவர்களை நெறிமுறை கடந்து, கீழ் மேல்—மேல் கீழாக வரம்பின்றிக் கலந்து ஒருமைப்படுத்த அரும்பாடுபட்டும், சநாதன தர்ம சாஸ்திரங்களைப் புறக்கணித்தும், வேதாகமநிந்தை—திருக்கோயில் நிந்தை—ஸநாதனதர்ம நிந்தை—பெரியார் நிந்தை—தெய்வநிந்தை யாதிய புரிந்து, ஸநாதன வைதீக மார்க்க விரோதியாய் வருணுச்சிரம தர்மநாசஞ் செய்யக் கிளம்பி, காங்கிரஸ் என்ற வியாசத்துடன் பலரை யுடன் கொண்டு பல தீங்கிழைத்து வருகின்ருராதலின், இவரே ஸநாதன துரோகி.

K. S. சாஸ்திரியார்.

---



**இலங்கை:**—நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் ஆண்டு விழாவும் பொதுக்கூட்டமும் வைகாசி ௯௧௳ நடைபெறுவதாக அழைப்பு வரப்பெற்று மகிழ்வுற்ருேம்.

**திருவவிநாசி:**—பெருங்கருணை அம்மையார் அவிநாசி யப்பரின் வசந்தோற்சவம், வைகாசி ௨௨, ௨௫, ௨௪௳களில் திருவுலாவும், ௨௨௳ சுவாமி சிற்பவானந்தா அவர்கள் தலைமையில் விரிவுரைகளும், புது நந்தவனத் தலைவர் உயர்திரு கருணாலய மூர்த்தி முதலானவர்களின் நன் முயற்சியால் இனிது நடைபெற்றன.

**திருக்களர்:**—ஸ்ரீ அமிர்தவல்லி அம்பா சமேத பாரிசாதவனேஸ்வர சுவாமிக்கு, வைகாசி ௯௰௳ அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும், ஐம்பெருங் கடவுளர் திருவுலாவும், கோவிலூர் மடாலய கர்த்தர் உயர்திரு மகாதேவஞானதேசிக சுவாமிகளாலும், தர்மகர்த்தர் கோட்டையூர் க. வீ. சொ. வீ. அளகப்பசெட்டியாரவர்களாலும்அதிவிமரிசையாகச் செய்யப்பெற்றன.

**திருவியலூர்:**—கும்பகோணத்திற்குக் கிழக்கே 4 மைலிலும், திருவிடைமருதூருக்கு வடமேற்கே 3 மைலிலும் தேவாரம்பெற்றுள்ள இத் திருத்தலத்தில், சௌந்தரநாயகி சமேத சிவயோகி நாதருக்கு, தேவகோட்டைத் திருவாளர் அ. ராம. அ. லெ. அ. அருணுசலச் செட்டியாரவர்களால் திருப்பணி செய்து நிறைவேறப்பெற்று, இம்மதி ௧௧௳ உதயாதி $7\frac{3}{4}$—க்குமேல் $12\frac{1}{2}$—நாழிகைக்குள் மகாகும்பாபிஷேகம் செய்யப்பெறும் எனத் திருமுகம் வழங்கியுள்ளார்கள்.

**கௌமார சபாலயம்:**—கோயமுத்தூருக் கணித்தாயுள்ள சிரவணபுரத்தில், தவநிலைப் பெரியாராகிய உயர்திரு இராமாநந்த சுவாமிகள் திருவருளநுபூதி விளக்கத்தால் அமைந்துள்ள கௌமார மடாலயத்தில், குருநாதன் கட்டளையைச் சிரமேற்கொண்ட அன்பர்கள் பெரும் பொருட்செலவு செய்து கட்டி முடித்த சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார சபாமண்டப சம்புரோக்ஷண வைபவம், வைகாசி ௨௫-ல் நடைபெற்றது. கௌமாரத் தமிழ்நூல் வழக்கில் யாகாதி கிரியைகளும் மாகேசுவர பூசையும், இரண்டாயிரவர்க்குமேல் அன்னதானமும், இசையுடன் பஜனையும் நடனமும் செய்யப்பெற்றன. திரு. கந்தசாமி சுவாமிகள் தோத்திரப் பதிகம் ஓதி அரங்கேற்றினர். இராமாநந்த சுவாமிகள்மீது திரு. முருகதாச பிள்ளையவர்கள் தாமியற்றிய 'நெஞ்சுவிடுதூது' என்னும் நூலைப்படித்துப் பொருள் விரித்தனர். திரு. செந்திநாயகம் பிள்ளையவர்கள் வாயுறை வாழ்த்துக்கூறிப் பிரசங்கித்தனர். செட்டிபாளையம் வித்துவான் திரு. கல்யாணசுந்தரக் கவுண்டர் 'கமலபந்த' சித்திரக்கவி சமர்ப்பித்தனர். பீளமேடு திரு. வேணுகோபாலசாமிநாயக்கர் 'கௌமாரம்' என்ற சொற்பொழிவு நிகழ்த்தினர். அரகர முழக்கம் பெருக்கெடுத் தோங்க, உயர்திரு இராமாநந்த சுவாமிகளின் தவமகிமையால் நன்கு நிறைவேறியது.

**குடியரசு:**—பத்திராதிபர் திரு. இராமசாமியார், ஆயிரரூபா கடனிறுக்க இசையாராய்ச் சிறை யிருக்க இசைந்தனரெனவும், அவரது பத்திரிகை நிறுத்தப்பட்டிருக்கிறது எனவும், அவர்சேமம் [illegible] உலகக்ஷேமமே யெனவும் தெரிகின்றன.

186928

**செட்டியார்கள் மகாநாடு:**—வைகாசி ௨௯௳ செட்டிநாடு ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் மாளிகையில், குமார ராஜா முத்தைய செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல நகரங்களிலிருந்தும் தனவணிக நகரத்தார்கள் பலர் வந்திருந்தனர். செய்கோன் நிலைமையைப்பற்றி, திருவாளர்களான: தலைவர் குமாரராஜா அவர்களும், சென்னை அட்வகேட் இராமநாதன் செட்டியாரவர்களும் தெளிவாக விளக்கினர். மேல் நடைபெற வேண்டியவைகளைப்பற்றி நீண்ட ஆராய்ச்சியுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. வந்திருந்த பிரதிநிதிகளுக்கெல்லாம் குமாரராஜா அவர்களால் ஓர் நல்விருந்து நடாத்தப்பெற்றது. பிரிட்டிஷாருக்கும் பிரான்ஸியருக்கும் எழுத்து மூலமான நடவடிக்கைகளிலிருந்து, பிரஞ்சு கவர்ன்மெண்ட் மற்றப் பாங்கர்களைப்போல செட்டியார்களையும் பாவிக்கவும், நாடுகடத்தாதிருக்கவும், பாரிஸிலிருந்து அறிவித்திருப்பதாகக் கடிதங்களால் தெரியவருகின்றது.

**கம்பை தனவைசியர் கல்விநிலையம்:**—நான்காவது ஆண்டுவிழா, 30—5—1933ல் இரங்கூன் அரிகிருஷ்ண ஹாலில், கல்வி இலாகா தலைவர் திரு. ஜே. எம். சிம்ஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் ஆங்கிலநாடகமும், நந்தனார் சரித்திர நாடகமும் மிகத்திறமையாக நடித்தனர். மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

**சுகமே வந்துசேர்ந்தனர்:**—மலாயாவுக்குச் சென்றிருந்த காரைக்குடி திருவாளர் ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கச் செட்டியாரும் அவரது மனைவியாரும் சிந்தாயாத்திரையாய் ஜூன் ௴ 1௳ தமது சொந்தவூர் வந்துசேர்ந்தனர்.

**சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியர்:**—திருக்கோவலூராதீனம்திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில், உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா வைகாசி ௨௭௳ மூலநட்சத்திரத்தன்று அதிவிமரிசையாக நடைபெற்றது. கடவுட்பூசையாதியவைகளுடன் வேதவிதிப்படி சடங்குகள் செய்யப்பெற்றன. அன்றுமாலை மகிபாலப்பதி பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் போறிஞர்களின் விரிவுரைகள் நிகழ்ந்தன. ஓர் சீரிய கலாசாலை திறக்கப்பெற்றது. சைவத்திலும் தமிழிலும் பெருகிய காதலுடைய மெய்யன்பர்கள் பலர் வந்திருந்து மிகத் திறமையுடன் பெருமைபெற நடத்திவைத்தனர். உயர்திரு சுவாமிகள் யாவர்க்கும் ஆசி வழங்கினர்.

**ராவ்பகதூர்:**—கோட்டையூர்த் திருவாளரும், திருப்புத்தூர் தாலுகா போர்டு தலைவரும் ஆகிய க. வீ. அள. ராம. இராமநாதன் செட்டியாரவர்களுக்கு, அரசினர் நன்மதிப்புடன் ராவ்பகதூர் பட்டம் வழங்கியிருக்கிறார்கள். மகிழ்ச்சிக்குரியதே.

**அரசுரிமைஇழந்தார்:**—ஜர்மன் இளவரசர்குமாரர், சாமானிய வகுப்புப் பெண்ணை மணந்ததால், இராஜகுடும்ப உரிமையை இழந்துவிட்டதாகவும், இனி மன்னராட்சி யேற்பட்டாலும் இவர் அரிசுரிமையிற் பங்குபெற இயலாதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறார். ஜாதி வித்தியாசம் எங்குதான் இல்லாமலிருக்கிற

---

# செய்தித் திரட்டு.

**கண்டவராயன்பட்டி:**—பணிச்சாறுடையார் தருமவித்தியாசாலையின் மூன்றாவதாண்டு நிறைவுவிழா வைகாசி ௧௫௳ திருக்குறட் குமரேசவெண்பா ஆசிரியர் திருவாளர் ஜெயவீரபாண்டிய கவிராயர் தலைமையில், அரிய பெரிய விரிவுரைகளுடன் நிறைவேறியது.

**திருப்புனவாயில்:**—பெரியநாயகி சமேத பழம்பதிநாதர் பிர்மோற்சவம், வைகாசி ௧௫௳ தொடங்கி ௨௫௳ தேர்த்திருவிழாவும், ௨௬௳ சப்தாவரணம் தீர்த்தவாரியும், தேவகோட்டைத் திருவாளர் அள. சுப. பழ. சுப்பிரமணியன் செட்டியாரவர்களால் சிறப்பாகச் செய்யப்பெற்றன. பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளையவர்கள் வாழ்த்துப் பாக்கள் கூறினர். தேவகோட்டைச் சிவாகம சங்கத்துச் சித்தாந்த போதகாசிரியர் திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள் பொருள் விளக்கினர்.

**தஞ்சை:**—வைகாசி ௨௭௳ மூலம், திருஞானசம்பந்த சுவாமிகளின் குருபூசைத் திருநாளன்று, முத்துப்பல்லக்குகளில் மூர்த்திகள்எழுந்தருளி வந்த காக்ஷிகள் நேர்த்தியாயிருந்தன. திரளான அன்பர்கள் வந்து தெரிசித்து இன்புற்றனர்.

**கரந்தைத்தமிழ்ச்சங்கம்:**—வைகாசி ௨௭௳ திருஞானசம்பந்தர் திருநாள்கொண்டாடி, மறைத்திருவாளர். சுந்தரராமையரவர்கள் தலைமையில், திருவாளர் ப. சிவகுருநாத பிள்ளையவர்களால் 'சைவம் நாட்டியமாது' என்னும் விரிவுரை செய்யப்பெற்றது.

**திருச்சிக்கல்:**—சத்தியாயதாக்ஷி சமேத நவநீதேசுவரருக்கும், சுந்தர விநாயகருக்கும், வல்லிதேவ சேனாசமேத சிங்காரவடிவேலருக்கும், தியாகராஜர் நடராஜர் சண்டிகேஸ்வரர் ஆதிய மூர்த்திகட்கும், கோமளவல்லித் தாயார் சமேத கோலவாமனப் பெருமாளுக்கும், இராஜகோபுரம் முதலான அநேக கோபுரங்களும், விமானங்களும், திருமதில்களும், கல்யாணமண்டபம் முதலான அநேகமண்டபங்களும், திருக்குளம் வாகனம் திருவாபரணம் முதலிய பல திருப்பணிகளும் நிறைவேறப்பெற்று, ஷை திருப்பணிச் செல்வர்களுள் ஒருவரும், ஷை திருக்கோயிற் றருமகருத்தரும்ஆகிய ஆத்திக்காடு தெற்கூர் திருவாளர் கரு. முத்து. அளகப்பசெட்டியாரவர்களால் வைகாசி ௨௫௳ முற்பகல் மகாகும்பாபிஷேகமும், மாலை மகாபிஷேகமும், இரவு இடபாரூடராய் ஐம்பெருங் கடவுளர்களும், உவண ஊர்தியாய்க் கோலவாமனப் பெருமாளும் திருவுலாப் போந்தருளலும், மிகவைபவமாகச்செய்யப்பெற்றன. கோவிலூர் வேதாந்த மடாலயம் உயர்திரு: மகாதேவஞான தேசிக சுவாமிகள் முதலிய பெரியார்களும், பெருந்திரளான அன்பர்குழாங்களும், பல பாகங்களிலிருந்தும் வந்து தரிசித்துப் பரமானந்த வாரியிற் றிளைத்து இன்புற்றனர். திருப்பணியின் பேரமைப்பைக் கண்டார் யாவரும் பெருவியப்புறுகின்றனர். தர்மகர்த்தரவர்களின் நிர்வாகத்திறன் போற்றற்குரியது. இத் திருத்தலத்திற்குத் தேவாரத் திருப்பதிகங்களும், திருப்புகழும், தலபுராணமும் உள்ளன.

**திருச்செங்கோடு:**—அர்த்தநாரீஸ்வர சுவாமிக்கு ரதோற்சவம், வைகாசி ௧௫௳ தொடங்கி, ௨௮௳ வரை சிறப்பாக நிறைவேறியது.

**நெல்லையப்பருக்கு வெள்ளிரதம்:**—திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பருக்கு வெள்ளியால் கோரதம் செய்து சமர்ப்பித்திருக்கிற அம்மையார் மதுரை ஷண்முக சுந்தரப்பட்டர் மனைவியும் திருநெல்வேலி தேவாலய ஸ்தானீகராயிருந்து காலஞ்சென்ற சொக்கநாதபட்டரின் புதல்வியுமான கோமதியம்மாள் ஆவார். கோரதத்திற்காக 50,000 ரூபாய் செலவாயிருக்கிறது. அதனைப் பத்திரமாக வைத்திருப்பதற்குரிய இடத்திற்காக 4000 ரூபாய் செலவா யிருக்கிறது. இந்த அம்மாள் குடும்பத்தார் பரம்பரையாகவே அங்கு ஸ்வேத கேது திருவிழாவை நடத்தி வருகிறார்கள்: அதற்காக மரத்தால் கோரதம் செய்து கொடுத்திருந்தார்கள். அதற்குப்பதிலாக இப்பொழுது வெள்ளிரதம் செய்து கொடுத்திருக்கிறார்கள். வெள்ளி ரதத்தின் உள்ளே பொன் வேலையும் செய்யப்பட்டிருக்கிறதாம்.

**இருகவிகளுக்குஉரை:**—பரிமணங்குடி வித்துவான் திரு. முத்துப்பிள்ளையவர்களியற்றி, நாட்டரசன் கோட்டை திருவாளர் கு. கருப்பன் செட்டியாரவர்கள் உதவியால் அச்சியற்றி வெளிவந்துள்ள விநாயககதையிற் காணும் ஒன்றிரண்டு சாற்றுக்கவிகளுக்கு, ஓர் விற்பனரால் அரியவுரை வரையப்பெற்று நமது பார்வைக்கு வந்துளது. அவ்வுரை மிகப்பொருத்தமும் பொருட்செறிவும் பெற்றிருத்தலின், அவ்வுரைகாரரின் திறம் போற்றற்குரியது.

**இஃதென்னவரம்பு:**—காந்தியாரின் ஜாதியென்ன? இராஜகோபாலாச்சாரியாரின் ஜாதியென்ன? அவர் மகனுக்கு இவர் மகளை மணம் புரிவிப்பதென்றால், அஃது எவ்விதியை மேற்கொண்டது? சமய சம்பந்தமா? சாதிசம்பந்தமா?. காந்தியார் கைக்கொண்ட கீதையில் இதற்குவிதியுண்டா? ஒருவிதியுமில்லாத இக்கலப்பு ருதுமதி விவாகத்தாற் பெறப்படும் சந்ததிகளை எந்தச்சாதி சமயத்திற் சேர்த்தெண்ணுவது? ஒரு பார்ப்பனி தாழ்ந்த வகுப்புப் புருடனைக் கூடிப்பெற்ற பிள்ளைகளே பஞ்சமசாதியென்பது வேதவிதியல்லவா? இவ்விந்தையே கலிகால மகாத்துமாக்களின் செயற்கரிய செயல்போலும்.

**அரிசனம்:**—இப்பெயர் யாருக்குரியது? இதன் பொருளென்ன? இப்பெயர் வழங்கியவர் யார்? இப் பெயருள் சனம் என்பது மக்கட்டொகுதியே யன்றோ? எஞ்சி நிற்பது அரிதானே? அதுசாதிப்பெயராகுமா? ஆயின், அச்சாதியார் யார்? யாதுகாரணம் பற்றி அவர்கட்கு அப்பெயர் வந்தது? என்பவற்றை அரிசனத்தலைவர்—அரிசன ஊழியர்—அரிசன சேவகர்—அரிசனபத்திரிகை—அரிசன ஆசிரியர் என்று பல பட்டப்பெயர்களை யிட்டுக்கொண்டு ஆரவாரித்துத் திரிபவர்கள் காரணங்காட்டி விளக்குவார்களாக!

ஒரு சநாதனி.

## "சிவநேசன்"

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற் றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமய உண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மை யாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

### ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ 40 0 0 |

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.